விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 236 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 27 செவ்வாய்க்கிழமை (12.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal றோயல்
சுத்தமான பசு நெய்
ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.
Marketed By:- (C-3630)
சிவா நறுமணப் பூங்கா®
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரசந்திக்கு அருகாமை)
தொ.பே : 021 2222 567


## தனியார் கல்வி நிலைய கிணற்றிலிருந்து மாணவியின் சடலம் மீட்பு

### வவனியாவில் சம்பவம்



(வவுனியா)

வவுனியாவில் தனியார் கல்வி நிலையத்தில் அமைந் துள்ள கிணற்றிலிருந்து உயர்தர மாணவி ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல் லூரியில் உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் கல்வி பயிலும் வவுனியா கோமரசன் குளம் பகுதியைச் சேர்ந்த சதா அருணி என்ற 15ஆம் பக்கம் பார்க்க

## கபில்ராஜின் புகழுடல் நேற்று நல்லடக்கம்

### முத்தையன்கட்டில் பொலிஸார் குவிப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முத்தையன் கட்டில் உயிரிழந்த எதிர்மன்ன சிங்கம் கபில்ராஜின் உடல் நேற்று நல்லடக்கம் 02ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் காற்றாலைக்கு எதிராக

# பல கிராம மக்கள் இணைந்து போராட்டம்



(மன்னார்)

மன்னார் காற்றாலை மின் கோபுரத்துக்கு எதிராக பல்வேறு கிராம மக்கள் ஒன்றிணைந்து நேற் றுப் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## முத்தையன்கட்டில் இளம் குடும்பஸ்தர் மரணம்

### பொலிஸ் ஊடகப் பிரிவு விசேட அறிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முத்தையன்கட்டில் இளம் குடும் பஸ்தர் ஒருவர் மரணமடைந்த சம்பவம் தொடர் பில் பொலிஸ் ஊடகப் பிரிவு விசேட அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட் 15ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் தனிமையிலிருந்த பெண் கொலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் தனிமையிலிருந்த பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி ஊற்றுப்புலம் பகுதியில் நேற்று மாலை இச்சம்பவம் இடம் 02ஆம் பக்கம் பார்க்க

## மண்கும்பானில் சடலம் மீட்பு

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மண்கும் பான் கடற்பகுதியில் ஆண் ஒருவரது சடலம் நேற்றுக் கரையொதுங்கியுள்ளது.

குறித்த சடலமானது யாருடையது என இதுவரை 15ஆம் பக்கம் பார்க்க

## மோ.சைக்கிள் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

### மீசாலையில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

மீசாலையில் மோட்டார் சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் மீசாலை கிழக்கு அல்லா ரையைச் சேர்ந்த வெற்றிவேலு கந்தையா (வயது-77) என்ப 15ஆம் பக்கம் பார்க்க

## மழை காரணமாக யாழில் 32 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் நேற்றுக் காலை பெய்த மழை காரணமாக யாழ்ப்பாணத்தில் 7 குடும்பங் களைச் சேர்ந்த 32பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப் பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிர திப் பணிப்பாளர் ரி.என்.சூரிய ராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட் பட்ட ஜே/351 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐவரும் ஜே/363 15ஆம் பக்கம் பார்க்க

## விடைத்தாள் திருத்தும் பணிகள் நேற்று ஆரம்பம்

### புலமைப்பரிசில் பெறுபேறு செப்ரெம்பரில்

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த 2025 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

அதன்படி புலமைப்பரிசில் பெறுபேறு எதிர்வரும் செப் ரெம்பர் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் வெளியிட எதிர்பார்ப் பதாக பரீட்சைகள் ஆணை யாளர்நாயகம் இந்திகாகுமாரி தெரிவித்துள்ளார். (ம-7)

## சங்குப்பிட்டியில் 250 கிலோ கஞ்சா மீட்பு

### இருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குப்பிட் டிப் பகுதியில் நேற்றுத் திங் கட்கிழமை பிற்பகல் 250 கிலோ 15ஆம் பக்கம் பார்க்க

## எரிகாயங்களுக்குள்ளான குடும்பப் பெண் உயிரிழப்பு

### தேநீர் தயாரிக்க மண்ணெண்ணெய் ஊற்றி அடுப்பைப் பற்ற வைத்தபோது விபரீதம்

(யாழ்ப்பாணம்)

தேநீர் தயாரிப்பதற்காக மண்ணெண்ணெய் ஊற்றி அடுப்பைப் பற்ற வைக்க முற் பட்டபோது உடலில் தீ பற்றி யதில் எரிகாயங்களுக்குள்ளான குடும்பப் பெண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் வட்டுக்கோட்டை டச்சு வீதியைச் சேர்ந்த சாரங்க தரன் துளசிமலர் (வயது 75) 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புங்குடுதீவில் கத்தியால் குத்தி ஒருவர் கொலை; நால்வர் காயம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் கத்தியால் குத்தி ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது.

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த அற்புதராசா அகிலன் (வயது 40) என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார்.

குறித்த நபர் மீது சரமாரியாகக் கத்திக்குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் அந்நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அதேவேளை கத்திக் குத்துத் தாக்குதலை மேற்கொண்ட நபரைப் பிடிக்க முயன்ற இரு பெண்கள் உள்ளிட்ட நால்வர் மீதும் கத்திக் குத்து தாக்குதலை மேற்கொண்டு விட்டு தாக்குதலாளி தப்பிச் சென்றுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நால்வரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## அராலியில் வாளுடன் குடும்பஸ்தர் கைது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலிப் பகுதியில் வாளுடன் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவட்டப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## துணுக்காய் பிரதேச செயலகம் முன் நபர் ஒருவர் உண்ணாவிரதப் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

துணுக்காய் பிரதேச செயலகம் முன்னால் நபரொருவர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

துணுக்காய் பிரதேச செயலகம் தனியார் முதலாளிகளிடம் இருந்து இதுவரை இலஞ்சமாகப் பெற்ற அனைத்தையும் மீளக் கையளிக்க வேண்டும்.

பிரதேச செயலக ஆளுகைக்குள்ள மக்கள் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும்.

2017ம் ஆண்டு வரட்சி நிவாரணம் வழங்கியமை தொடர்பில் அதன் தெரிவுப் பட்டியல் தொடர்பிலும் அனைத்து கிராம சேவகர் பிரிவிலும் நீதியானதும் நியாயமானதுமான விசாரணை மேற்கொள்ள வேண்டும். காணிப் பிணக்குகளைப் பாரபட்சமற்ற முறையில் தீர்க்கவேண்டும் மற்றும் காணிகள் வழங்கப்பட வேண்டும்.

கிராம அலுவலர் திருமதி கிருஸ்ணரூபன் கலைச்செல்வியின் தண்டனைப் பணியிட மாற்றம் தொடர்பில் வெளிப்படையான விசாரணையும் தீர்வும் வேண்டும் என்று கூறியே அவர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தவரைப் பேச அழைத்த போது அவர் பேசுவதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை இது தொடர்பில் கருத்துரைத்த பிரதேச செயலாளர் கிருஸ்ணரூபன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நபர் குறிப்பிடுகின்ற விடயங்கள் அனைத்தும் எனது நிர்வாகக் காலப்பகுதியில் இடம் பெறவில்லை. இது தொடர்பில் அவர் ஏற்கனவே ஜனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம், ஆளுநர் அலுவலகம், மாவட்ட செயலகம் உள்ளிட்ட திணைக்களங்களுக்கு முறைப்பாடுகளை அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பிலான விசாரணைகள் கடந்த இரு வாரங்களுக்கு முன்னதாக மாவட்ட செயலாளருடைய விசாரணைப் பிரிவினரால் அது தொடர்பிலான ஆவணங்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட செயலாளரினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அவர் போராட்டம் நடாத்துகின்ற இடத்துக்கு எமது உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தரை அனுப்பி வைத்து அழைப்பு விடுத்திருந்தேன். ஆனால் அவர் கதைப்பதற்கு உடன்பாடில்லை. நான் கதைக்க விருப்பமில்லை எனத் தெரிவித்திருந்தார். அவரின் கோரிக்கைகள் தொடர்பில் மாவட்ட செயலாளரை அணுகி அவரின் வேண்டுகோளை விரைவுபடுத்த முடியும்.

மேலும் இது தொடர்பிலான அறிக்கைகளை மாவட்ட செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளேன் என்று தெரிவித்தார். (ம-7,299)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



மண் மகிழ 12.03.1934

கண் நெகிழ 14.07.2025

அமரர் திருமதி
மகாபார்வதியம்மா வேலும்மயிலும்

கடந்த 14.07.2025 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பக் குலவிளக்கின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண நிகழ்வும் 12.08.2025 இன்று செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-3628)

சிவன் கோவிலடி,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:-
குடும்பத்தினர்
(பிள்ளைகள்)


### தனிமையில் ...

பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த விஜயரத்தினம் சரஸ்வதி (வயது-68) என்ற பெண்ணே கொலை செய்யப்பட்டவராவார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

### கபில்ராஜின் ...

செய்யப்பட்டது.

இதன்போது பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் விசேட பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டம் ஏதும் இடம்பெறும் என்ற அச்சத்தில் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், ரவிகரன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பிரதேசசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் கபில்ராஜின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். (ம-7,299)

### பல கிராம ...

மன்னார் தீவுப் பகுதியில் 2வது கட்டமாக காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (3) பாரிய காற்றாலைகளின் பாகங்கள் வாகனங்களில் மன்னார் நகரப் பகுதியை நோக்கி எடுத்து வரப்பட்ட நிலையில் மன்னார் தள்ளாடிச் சந்தியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்த நிலையில் தள்ளாடிச் சந்தி மற்றும் மன்னார் சுற்றுவட்டப் பகுதியில் தொடர்ச்சியாக மக்களும் பொது அமைப்புகள் இணைந்து சுழற்சி முறையில் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற நிலையில், மக்களின் எதிர்ப்பையும் மீறிக் காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கான பாகங்கள் மன்னார் நகரப் பகுதிக்கு பலத்த பொலிஸாரின் பாதுகாப்புடன் எடுத்து வரப்பட்டது.

எனினும் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் இடம்பெற்று வந்தது.

இந்த நிலையில் குறித்த போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள கீளியன் குடியிருப்பு, நடுக்குடா, கட்டுக்காரன் குடியிருப்பு, பருத்திப்பன்னை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு உள்ளிட்ட கிராம மக்கள் நேற்று திங்கட்கிழமை (11) 9 ஆவது நாளாக இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவு வழங்கியுள்ளனர்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரும் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த போராட்டத்திற்கு மன்னார் பிரஜைகள் குழு, பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி வரும் நிலையில் மன்னார் மக்களும் இளையோரும் இணைந்து தொடர்ச்சியாக இரவு பகல் பாராது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,285)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்த இராமேஸ்வர மீனவர்கள்

(சென்னை)

**இலங்கை கடற்படையினரின் தொடர் கைது நடவடிக்கைகளைக் கண்டித்தும், இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும் இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.**

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன்பிடி தடை காலம் முடிந்து மீன்பிடிக்க சென்ற 55 நாட்களில் 61 மீனவர்களையும் ஒன்பது படகுகளையும் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச் சாட்டில் இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் இலங்கை கடற்படையினரின் தொடர் கைது நடவடிக்கைகளைக் கண்டித்தும், இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும், இராமேஸ்வர விசைப்படகு மீனவர்களால் நேற்றுக் காலை காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யத் தவறும் பட்சத்தில் வரும் 13 ஆம் திகதி ஆர்ப்பாட்டமும், 15ஆம் திகதி உண்ணாவிரத போராட்டமும், 19ஆம் திகதி ரயில் மறியல் போராட்டத்திலும் ஈடுபட போவதாக மீனவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வேலை நிறுத்த போராட்டம் காரணமாக இராமேஸ்வரத்தில் சுமார் 600 இற்கும் மேற்பட்ட மீன்பிடி விசைப் படகுகள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லாமல் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளதுடன், சுமார் 20,000 மேற்பட்ட மீனவர்களும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மீன்பிடி சார்பு தொழிலாளர் களும் வேலை இழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இராமேஸ்வரம் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லாததால் நாள் ஒன்றுக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் வரை அந்நிய செலவாணி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அதி கூடிய வாகன விலை; 3ஆம் இடத்தில் இலங்கை

(கொழும்பு)

உலகில் உயர்ந்த வாகன விலையைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் மூன்றாவது இடத்தில் இலங்கை உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் வாகன விலை நிலை குறியீட்டின்படி, 2021 ஆம் ஆண்டில் வாகனக் கொள்வனவில் உலகின் மூன்றாவது அதிக விலையை கொண்ட நாடாக இலங்கை தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

உலக வங்கியின் வாகன விலை நிலைக் குறியீட்டின் படி, இலங்கையின் மதிப்பெண் 175 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது வாகன விலைகள் உலகளாவிய சராசரி அளவுகோலான 100 ஐ விட இலங்கையில் விலை 1.75 மடங்கு அதிகமாகும்.

இதில் சிங்கப்பூர் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் முதல் 2 இடங்களில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நவம்பர் 11 ஆம் திகதி உ/த பரீட்சைகள் ஆரம்பம்

### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்




(கொழும்பு)

2025 ஆம் ஆண்டிற்கான க.பொ.த உயர்தர பரீட்சைகள் நடைபெறும் உத்தியோகபூர்வ திகதியை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சுபாஷினி இந்தியா குமாரி லியனகே அறிவித்துள்ளார்.

அதன்படி உயர்தர பரீட்சைகள் நவம்பர் 11 ஆம் திகதி முதல் டிசம்பர் 5 ஆம் திகதி வரை நடைபெறும் என ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், க.பொ.த சாதாரண தர பரீட்சைகள் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 17ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இரண்டு பரீட்சைகளுக்கான விரிவான கால அட்டவணைகள் மற்றும் நுழைவு அட்டைகள் அந்தந்த திகதிக்குள் வழங்கப்படும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (நி)

## நாட்டை விட்டு தப்பியோடும் அரசியல் பிரபலங்கள்

(கொழும்பு)

கடந்த அரசாங்க காலங்களில் பாரியளவில் ஊழல் மற்றும் மோசடிகளை செய்த பல பிரபலங்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

அவ்வாறு தப்பிச் சென்றுள்ள முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர் பதவியில் உள்ள அரச அதிகாரிகளை இன்டர்போல் பொலிஸாரின் உதவியுடன் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் இலஞ்ச ஒழிப்பு ஆணையம் நடத்தும் விசாரணைகளுக்கு ஒத்துழைக்காமல் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றவர்கள் குறித்து நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

அத்துடன் அவர்களை கைது செய்ய இன்டர் போலிடமிருந்து சிவப்பு அறிவிப்புகளை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளுக்கு அவசியமான முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் குழு வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் விசாரணைகள் தொடர்பாக வாக்குமூலங்கள் வழங்க வேண்டிய நபர்கள் நாட்டிற்கு வந்து வாக்கு மூலங்களை வழங்குமாறு வட்ஸ்அப், மின்னஞ்சல் மற்றும் தூதரகங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குமூலங்களை வழங்க முன்வராத வர்கள் குறித்து நீதிமன்றங்களில் முறைப்பாடு அளிக்கப்படும். அவர்களை கைது செய்ய சர்வ தேச பொலிஸாரிடம் இருந்து சிவப்பு அறிவிப்புகள் பெறப்படும் என இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி)

## பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து மருத்துவர்களின் போராட்டம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

அரசாங்க மருத்துவ அதிகாரிகளினால் முன்னெடுக்கப் படவிருந்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

மருத்துவர்களின் இடமாற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மருத்துவர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிக்கத் தீர்மானித்திருந்தனர்.

எனினும், சுகாதார அமைச்சுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுடன் நடத்தப்பட்ட சந்திப்பின் போது சாதகமான பதில்கள் கிடைக்கப் பெற்றதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டதாக அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் நடவடிக்கைகள் குறித்து கண்காணிக்கப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவித்துள்ளது.

இடமாற்றங்கள் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. (நி)

## முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசுக்கு 'மொட்டு' சவால்

(கொழும்பு)

முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு தேசிய மக்கள் சக்தி அரசுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சவால் விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஜானக வக்கும்புர,

"உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்துவிட்டது. எனினும், மாகாண சபைத் தேர்தல் இன்னும் நடத்தப்படவில்லை. அது நடத்தப்பட வேண்டும்.

அரசுக்கு பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் உள்ளது. எனவே, அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

எதிரணிகள் ஒன்றிணைந்து கோரினால் தேர்தலை நடத்தத் தயார் என அரச தரப்பில் கூறப்பட்டது. ஒன்றாக அல்ல தனித்துப் போட்டியிடுவதற்குக் கூட நாம் தயார். முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசுக்குச் சவால் விடுக்கின்



றோம். அரசு கூறுவதை நம்புவதற்கு மக்கள் தயாரில்லை என்பது தேர்தல் மூலம் நிரூபணமாகும்" என குறிப் பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## "வடக்கின் கழகங்களுக்கிடையிலான போர்" சம்பியானாகியது மூளாய் விக்ரோறி கழகம்

**வடக்கின் கழகங்களுக்கிடையிலான போர் என வர்ணிக்கப்படும் மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகம் மற்றும் கிளிநொச்சி யுனைட்டட் வினையாட்டுக்கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டத் தொடரில் மூளாய் விக்ரோறி வினையாட்டுக்கழக அணி சம்பியனைக் கைப்பற்றியுள்ளது.**

சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று முடிந்த வடக்கின் கழகங்களுக்கிடையிலான போர் துடுப்பாட்டத் தொடரில் மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கிளிநொச்சி விளையாட்டுக்கழக அணி மோதியது.

இரண்டாவது தடவையாக நடைபெற்ற இப் போட்டியில் விக்ரோறி விளையாட்டுக்கழக அணி 4 இலக்குகளால் வெற்றி பெற்று இவ்வருடத்திற்கான சம்பியனாக முடிசூடிக்கொண்டது.

இப்போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராக மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழக வீரர் க.பிரசாத், சிறந்த துடுப்பாட்ட வீரராக கிளிநொச்சி யுனைட்டட் விளையாட்டுக்கழக வீரர் ச. சுபிகரன். சிறந்த களத் தடுப்பாளராக மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழக வீரர் க. பிரணவன் மற்றும் ஆட்ட நாயகனாக மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழக வீரர் கு.கதியோன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் 3ஆவது தடவையாக அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் வடக்கின் கழகங்களுக்கிடையிலான போர் துடுப்பாட்டத் தொடரானது கிளிநொச்சி மண்ணில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)



## இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பிரபல கால்பந்து வீரர் உயிரிழப்பு



இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பாலஸ்தீனத்தின் பீலே என அழைக்கப்படும் சுலைமான் அல்-உபைத் உயிரிழந்துள்ளார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பு இடையே காசாவில் போர் நடைபெற்று வருகிறது.

காசாவை முழுவதும் கைப்பற்றும் நோக்கில் உள்ள இஸ்ரேல் இராணுவம், மனிதாபிமான உதவி பெற காத்திருக்கும் பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில் கடந்த ஒகஸ்ட் 6 ஆம் திகதி, மனிதாபிமான உதவிகள் பெற காத்திருந்த மக்கள் மீது இஸ்ரேலியப் படைகள் நடத்திய தாக்குதலில், கால்பந்து வீரர் சுலைமான் அல்-உபைத் உயிரிழந்துள்ளார்.

காசாவை சேர்ந்த 41 வயதான சுலைமான் அல்-உபைத் "பாலஸ்தீனத்தின் பீலே" என அழைக்கப்படுகிறார். இவருக்கு திருமணமாகி 5 குழந்தைகள் உள்ளது.

பாலஸ்தீனத்தின் தேசிய கால்பந்து அணிக்காக 24 போட்டிகளில் விளையாடி, 2 கோல்களை அடித்துள்ளார். (3)

## 17 வயதில் அணித்தலைவர் பதவி சாதனை படைத்த இளம் வீரர்

இளம் வயதில் சர்வதேச அணியை வழிநடத்திய வீரர் என்ற சாதனையை, குரோஷியா அணியின் 17 வயதான ஜாக் உகுசிச் படைத்துள்ளார்.

குரோஷியா- சைப்ரஸ் அணிகளுக்கிடையிலான முதலாவது சர்வதேச ரி-20 கிரிக்கெட் போட்டியின் போது அவர் குரோஷியா அணியின் தலைவராக அறிமுகமானார். முன்னதாக 2022ஆம் ஆண்டு நோமன் அம்ஜத் தனது 18 வயதில் பிரான்ஸ் அணியின் தலைவராகச் செயற்பட்டதே சாதனையாக இருந்தது.

குறித்த சாதனையை ஜாக் உகுசிச் தற்போது முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## 2 ஆவது ஒருநாள் கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தானை வீழ்த்திய மேற்கிந்தியா



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி மேற்கிந்திய தீவுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. 3 போட்டி கொண்ட ரி-20 தொடரை பாகிஸ்தான் 2-1 என கைப்பற்றியது. முதல் ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் வென்றது.

இந்நிலையில், பாகிஸ்தான்-மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதிய 2ஆவது ஒருநாள் போட்டி டிரினிடாடில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவு அணி பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் விளையாடிய பாகிஸ்தான் 37 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 171 ஓட்டங்கள் எடுத்தது. ஹசன் நவாஸ் 36 ஓட்டங்களும், ஹூசைன் தலாத் 31 ஓட்டங்களும் எடுத்தனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் ஜெய்டன் சீலஸ் 3 விக்கெட் கைப்பற்றினார்.

இதையடுத்து, 35 ஓவரில் 181 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மே.இ.தீவு அணி களமிறங்கியது.

இறுதியில், மே.தீவுகள் அணி 33.2 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 184 ஓட்டங்கள் எடுத்து, 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டி கொண்ட தொடரில் இரு அணிகளும் 1-1 என சமனிலை வகிக்கிறது. ஆட்ட நாயகன் விருது மேற்கிந்திய தீவுகள் அணி வீரர் ரோஸ்டன் சேசுக்கு வழங்கப்பட்டது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமாக பரவும் எலிக்காய்ச்சல்

## பொது மக்களுக்கு அறிவுறுத்தல்

**(கொழும்பு) ------------------**

**நாடளாவிய ரீதியில் எலிக்காய்ச்சல் பரவும் வீதம் தற்போது அதிகரித்துள்ளதாக கொழும்பு - பொரளை சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் போதனா மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.**

எனவே சதுப்பு நிலங்கள் மற்றும் வயல் வெளிகளில் விளையாடும் போது சிறுவர்கள் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகச்சந்திப்பில் கருத்துரைத்த விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா சிக்குன்குனியா மற்றும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக தெரிவித்தார்.

எனினும் சிறுவர்களுக்கு தற்போது பாடசாலை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதால் அவர்கள் அதிகமாக சதுப்பு நிலங்கள் உள்ளிட்ட பகுதிகளில் விளையாடக்கூடும் என அவர் கூறியுள்ளார்.

அவ்வாறு செல்லும் போது பாதணிகளை அணிவிக்குமாறும் பெற்றோருக்கு விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா அறிவுறுத்தியுள்ளார்.

சதுப்பு நிலங்கள் மற்றும் வயல் வெளிகளில் விளையாடும் சிறுவர்களுக்கு, ஐந்து அல்லது ஆறு நாட்களுக்கு காய்ச்சல், கண்கள் சிவத்தல் அல்லது மஞ்சள் நிறமாகுதல், சிறுநீர் மஞ்சள் நிறத்தில் வெளியேறுதல் மற்றும் வயிற்றுவலி போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் உடனே மருத்துவர் ஒருவரை நாடுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.


குறித்த நோய் அறிகுறிகள் எலிகாய்ச்சலுக்கு வழிவகுக்கும் எனவும் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இவற்றை ஆரம்பத்திலேயே கவனிக்காமல் விட்டால் அது சிறு நீரகத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை தற்போது டெங்கு நோயின் தாக்கம் குறைந்திருந்தாலும் சுற்றுச்சூழலை சுத்தமாக பேணுமாறும், அவர் அறிவுறுத்தியுள்ளார். (நி)


அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

நன்றி நவிலலும்



எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு 14.07.2025 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர். நடராசர் சிவபாலகணேசன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 12-08-2025 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 13-08-2025 புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களை பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(5014)

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்
077 507 7432






# 50 லட்சம் ரூபாய் பெறுமதியான அம்பருடன் ஒருவர் கைது

(கொழும்பு)

50 லட்சம் ரூபாய் பெறுமதியான திமிங்கலத்தின் வாந்தி எனப்படும் அம்பர் கிரிஸை வைத்திருந்த குற்றச்சாட்டியில் நபர் ஒருவரை திவுலபிட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த ரகசிய தகவலையடுத்து திவுலபிட்டிய - நீர்கொழும்பு வீதியில் உள்ள போமுகம்மன பகுதியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த கைது இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த நபரிடமிருந்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ 200 கிராம் அம்பர் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸாரின் விசாரணையில் சந்தேக நபர் வத்துருகம, கிரிந்திவெல பகுதியைச் சேர்ந்த 44 வயதானவர் என தெரியவந்துள்ளது. இந்நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திவுலபிட்டிய [illegible] ஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி)

# இராசிபலன்

12.08.2025
ஆடி 27, செவ்வாய்க்கிழமை
திருதியை முற்பகல் 10.36 மணி வரை
பூரட்டாதி பிற்பகல் 2.24 மணிவரை

சுப நேரம் 10.34-12.04 மணிவரை
இராகுகாலம் 3.04-4.34 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்.

சந்திராஷ்டமம்
மகம், பூரம்.

வளவன்

- **மேஷம்**: தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவ முன்வரலாம்.
- **கடகம்**: கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.
- **துலாம்**: தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.
- **மகரம்**: தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்
- **ரிஷபம்**: பொது வாழ்வில் பாராட்டும், புகழும் கூடும் நாள், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.
- **சிம்மம்**: உதவி செய்த சிலரே உதாசீனப்படுத்துவது கண்டு வருத்தமடைய நேரிடலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.
- **விருச்சிகம்**: தொலைதூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி கூடும் நாள்.
- **கும்பம்**: நண்பர்களால் வளர்ச்சி கூடும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும்.
- **மிதுனம்**: பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உற்சாகமான நாள்.
- **கன்னி**: சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடலாம், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.
- **தனுசு**: பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.
- **மீனம்**: குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது, பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், கற்பனை மிகு... யான நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் இருந்து நல்லூருக்கு வேல் தாங்கிய பாத யாத்திரை

(சாவகச்சேரி)

வவுனியா வேப்பங்குளம் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி முத்துமாரி அம்பாள் திருக்கோவிலில் இருந்து நல்லைக் கந்தன் திருத்தலத்திற்கு 12 வருடமாக வேல் தாங்கிய பாத யாத்திரை இடம் பெற்று வருகின்றது. அந்த வகையில் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி 20 ஆம் திகதி புதன் கிழமை நல்லூர் ஆலயத்தை வந்தடையவுள்ளது.

நல்லூர் ஆலய தேர்த் திருவிழா 21 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் மேற்படி வேல் தாங்கிய பாத யாத்திரை முன்னெடுக்கப்படுகின்றது.

மேற்படி பாத யாத்திரை வவுனியா மன்னார் வீதி வழியாக வவுனியா நகரை அடைந்து தொடர்ச்சியாக 7தினங்கள் ஏ9 பிரதான வீதி அருகாமையில் அமைந்துள்ள 129 ஆலயங்களை தரிசித்து நல்லூர் கந்தனை அடைய விருப்பதாக வேப்பங்குளம் ஸ்ரீபத்திரகாளி முத்துமாரி அம்பாள் திருக்கோவில் ஆலய நிர்வாகி அறநெறிச்செல்வி கு.ஜெயராணி அறிவித்துள்ளார். (8-30)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபமும் இணைந்து வழங்கும் "தெய்வீக இசையரங்கு" இன்று செவ்வாய்க் கிழமை மாலை 6.45 மணி முதல் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் குழுஇசை நிகழ்வில் பாட்டு-சாரங்கம் இசைமன்ற மாணவர்கள், வயலின்-கே.வேலதீபன், மிருதங்கம்- மு.சுலக்சன், தபேலா-ந.கேதாரநாத், நெறியாள்கை-திருமதி.வாசஸ்பதி றஜீந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள இரட்டை வயலின்-ப.சியாம்கிருஷ்ணா, மிருதங்கம்-சு.கமலதாஸ், கெஞ்சிரா-அ.சண்முகப்பிரியன், முகர்சிங்-க.நந்தகுமார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

# யாழ்- கொழும்பு தொடருந்தில் இயந்திரக் கோளாறு

## பயணிகள் அசௌகரியம்

(தருமபுரம்)

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையேயான இரவு நேர தபால் தொடருந்தின் இயந்திரம் செயலிழந்தமையால் பயணிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில், நேற்று முன்தினம் இரவு காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கித் தமது சேவையை, தபால் தொடருந்து ஆரம்பித்திருந்தது.

இந்நிலையில் கிளிநொச்சி கரடிப் போக்கு பகுதியில் இயந்திரம் செயலிழந்தது.

இதன் காரணமாக சுமார் மூன்று மணித்தியாலங்கள் வரை பயணிகள் காத்திருந்தனர்.

இதனை தொடர்ந்து காங்கேசன்துறையில் இருந்து வருகை தந்த மற்றுமொரு இயந்திரம் மூலம் தொடருந்து, கொழும்பை நோக்கிப் புறப்பட்டது. (8-316)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 200 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 150 | 200 |
| தக்காளி | 160 | 200 | 150 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 250 | 350 | 250 | 300 | 400 |
| கரட் | 520 | 750 | 600 | 600 | 700 |
| பூசணி | 100 | 140 | 100 | 80 | 100 |
| புடோல் | 100 | 100 | 200 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 120 | 150 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 130-250 | 300 | 220 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 130 | 130 | 150 |
| பாகற்காய் | 400 | 450 | 300 | 450 | 500 |
| வெண்டக்காய் | 150 | 100 | 150 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 150 | 250 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 250 | 240 | 250 | 220 | 300 |
| பீற்றூட் | 150 | 150 | 150 | 120 | 200 |
| கறிமிளகாய் | 400 | 400 | 500 | 450 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 350 | 400 | 200 | 400 |
| போஞ்சி | 700 | 800 | 600 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 200 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 40-120 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 100 | 150 | 150 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 100-170 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 700 | 600 | 500 | 750 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 400 | 250 | 500 |
| முள்ளங்கி | 150 | 120 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | -- | 200 |

## நல்லூர் உற்சவ கால அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் "அருளுரை" இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிமுதல் 8.30 வரை சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு "அறியாமை பொறுத்திலையே" எனும் தலைப்பில் அருளுரை ஆற்றுவார். (8)

## மரியன்னை பேராலய திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலய ஜூபிலி ஆண்டுத் திருவிழா கடந்த 6 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து நவநாள் திருப்பலிகள் தினமும் மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி திருச்செபமாலையுடன் நடைபெற்று வருகிறது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 5.15 மணிக்கு நற்கருணைப் பெரு விழாவும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5.15 மணிக்கு விண்ணேற்புப் பெருவிழாவின் முதல் திருப்பலியும் காலை 6.45 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும் அதனைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு மரியன்னையின் திருச்சொரூபப் பவனியும் இடம் பெறவுள்ளது. (3-106)




## கா! நல்லைக் குமரேசனே!

உயிரென்ன உடலென்ன வுணர்வென்ன யாவிலும்
உறவாடும் மறவேலவா!
பயிரெனத் தளிர்த்திடும் பாசங்கொள் நெஞ்சிலே
படர்ந்தாளும் பரமகுருவே!
மயிலுடன் வேலோடு மாதிருவர் புடைசூழ
மாநகரில் தோன்றும்பதியே
ஒயிலாக வந்திங்கு வயமான பயம்நீக்கும்
ஓம்நல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

## முருகன் வருகின்றான்!

சேவல் கொடி பறக்கச் சேயோன் வருகின்றான்-"சுட்ட"
நாவல் பழம் தந்த சுந்தரன் வருகின்றான்- வேலாம்
காவல் படை கொண்டு வீரனவன் வருகின்றான்- நல்லைக்
கோவில் கொண்டுறையும் முருகனவன் வருகின்றான்!

ப. மகேந்திரதாசன்,
நாயன்மார்கட்டு.

## வந்தொருக்கால் தரவேண்டும் நீதி

கொடியேற உந்தன் திருவிழாக் கண்டனை
கோல மயில் வாகனனே வேலா!
படியேறி வந்துன் பாதங்கள் தொழுதார்
பாராத நிலையேனோ முருகா
முடிவேது மில்லாத் துயரங்கள் தன்னால்
மாய்கிறார் நாளுந்துயர்த் தீயில்
வடிவேலைக் கொண்டு வரவேண்டும் நீயே
வந்தொருகால் தரவேண்டும் நீதி.

கலாபூஷணம்
நடராசா இராமநாதன்.

## பாதக் கமலம் பற்றுவோம்

புள்ளி மயில் மீதேறி
வலம் வந்திடுவான்
வள்ளிதெய் வானையுடன்
காட்சியும் தந்திடுவான்
கள்ளமில்லா அடியவரின்
சிந்தையிலே நின்றிடுவான்
பள்ளிகொண்ட நல்லூர்
பதியினிலே ஆட்சியும் புரிந்திடுவான்
பக்தர் வினையறுக்கும்
பால முருகனாய்
பாரினில் துலங்கிடுவான்
அவன் பாதக் கமலமே
தஞ்சமென பணிந்திடுவோம்.

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு- கிழக்கு ஹர்த்தாலுக்கு முழுமையான ஆதரவு

(கொழும்பு)

இலங்கை இராணுவ வீரர்களால் ஒருவர் தாக்கப்பட்டு உயிரிழந்ததாக கூறப்படும் சம்பவத்தை கண்டித்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும் ஹர்த்தாலுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் - முத்துஐயன்காட்டுப் பகுதியில் இராணுவத்தால் தாக்கப்பட்டு, உயிரிழந்தவருக்காக வடக்கு மற்றும் கிழக்கில் 2025 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வெள்ளிக் கிழமை அனுசரிக்கப்படவுள்ள 'ஹர்த்தால்' போராட்டத்துக்கு ஒரு இலங்கையராகவும், மலையக தமிழராகவும் எனது முழுமையான ஆதரவினை வழங்குவதாக தெரிவித்துக் கொள்கிறேன்.

யுத்தம் நிறைவடைந்து 16 ஆண்டுகள் கடந்த பின்பும், இவ்வாறான மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் நிகழ்வது மிகவும் வருத்தமளிப்பதாகவும், இதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் வலியுறுத்துகின்றேன் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)



கு. சண்முகநாதனின் "ஈழநல்லூர் கந்தசுவாமி கோயில் வரலாற்றுண்மையும் ஞானப்பொருள் விளக்கமும்" நூல் வெளியீடானது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லை ஆதீனத்தில் சான்றோர்கள் முன்னிலை யில் சிறப்புற இடம்பெற்றது.

# கறுவா பதப்படுத்தலுக்கு நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

காலி மாவட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கறுவாப்பட்டை பதப்படுத்தும் மையங்களுக்கு 2.1 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

கறுவாப் பொருட்களின் தரம் மற்றும் விளைச்சலை அதிகரிக்கும் நோக்கில் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அறுவடையின் பின்னர் கறுவாப்பட்டை உற்பத் திகளின் தொழில்நுட்ப செயல்முறையை நெறிப்படுத்துவதன் மூலம் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும் பெறுமதி கூட்டப்பட்ட பொருட்களை ஊக்குவிப்பதற்கும் ஆறு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கறுவாப்பட்டை பதப்படுத்தும் நிலை யங்களை நிர்மாணிப்பதற்கு 2.1 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இரண்டு கறுவாப்பட்டை இலை எண்ணெய் எடுக்கும் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 1.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், கறுவாப்பட்டை உலர்த்தும் இயந்திரமும் இதன் கீழ் கொள்வனவு செய்யப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(0430)

UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180

Western Union WU MoneyGram Ria Money Transfer ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

தொடர்புகளுக்கு

077 839 3974, 076 889 1308


## கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## வருடாந்த பொதுக்கூட்டத்திற்கான பிரேரணைகள் கோரல்

மேற்படி எமது சங்கத்தில் எதிர்வரும் 14.09.2025 ஆம் திகதி வருடாந்த பொதுக்கூட்டம் நடாத்துவதற்கு தீர்மானித்திருப்பதால் தங்களது தனிப்பட்ட பிரேரணைகள் இருப்பின். அவற்றை 24.08.2025 ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளர், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம், கரவெட்டி எனும் முகவரிக்கு அல்லது எமது சங்கத்தின் கிளை நிலையங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தலைவர்**
**திரு.பு.இராதாகிருஸ்ணன்**

(சி-3626)

**செயலாளர்**
**திரு.பா.பிரதீபன்**

## பெறுகைகளுக்கான அறிவித்தல்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

### வாகன சுத்திகரிப்பு சேவை 2025-2026

தலைவர், பிராந்திய பெறுகைகள் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட வாகனங்களுக்கான சுத்திகரிப்பு சேவையினை வழங்குவதற்காக தகைமையுள்ள விலை மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களை கோருகின்றார்.

**1.யாழ் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வாகனங்களிற்கான சுத்திகரிப்பு சேவை**

| தொ.இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | கேள்வி உத்தரவாத முறி | கேள்வி திறக்கும் நேரம் |
|---|---|---|---|---|
| 01 | NP/RDHS/VS/2025 | வாகன சுத்திகரிப்பு | 100,000.00 | 26.08.2025 மு.ப 10.30 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி மேற்கொள்ளப்படும்.

02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

 அ. விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

 ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின்/ சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

 இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 - பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியிலும் 021222 6253, 0212221278 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ்முகவரியில் வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் **12.08.2025** ஆம் திகதி முதல் **25.08.2025** ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா **3,000.00** அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை ஆவணங்கள் **26.08.2025** அன்று காலை **10.30** மணிக்கு முன்பதாக **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்** என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் விலை மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் **19.08.2025** அன்று காலை **10.00** மணிக்கு நடைபெறும்.

08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் **வங்கியில்** செலுத்தி அவ் ஆவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

09. இவ் விலை மனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனு கோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்: 021-222-9971**
**மின்னஞ்சல்:** rdhsjaffna 15@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## குளோரின் வாயுவை சுவாசித்த 600 யாத்ரீகர்கள் வைத்தியசாலையில்



(பக்தாத்)

ஈராக்கில் நீர் சுத்திகரிப்பு ஆலையில் இருந்து கசிந்த "குளோரினை" சுவாசித்ததால், 600 இற்கும் மேற்பட்ட யாத்ரீகர்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது.

இதனால், அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

மேற்காசிய நாடான ஈராக்கில் உள்ள நஜாப் மற்றும் கர்பாலா நகரங்களுக்கு, ஷியா பிரிவு முஸ்லிம்கள் புனித யாத்திரை மேற்கொள்வது வழக்கம். ஈராக்கின் தெற்கு மற்றும் மையப் பகுதியில் இந்த இரு நகரங்களும் அமைந்துள்ளன.

இந்நிலையில், கர்பாலா - நஜாப் சாலை இடையே உள்ள நீர் சுத்திகரிப்பு ஆலையில் நேற்று முன்தினம் திடீரென குளோரின் வாயு கசிந்தது. அப்போது, கர்பாலாவுக்கு புனித யாத்திரை வந்த 600 இற்கும் மேற்பட்ட யாத்ரீகர்களுக்கு, இந்த வாயுவை சுவாசித்ததால் மூச்சுத்திணறல் ஏற்பட்டது.

இதையடுத்து, பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார், அவர்களை மீட்டு அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். (நி)

## ஏழைகளையும் விட்டுவைக்காத ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், வோஷிங்டனில் வீதியோரங்களில் வசிப்பவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் குற்றவாளிகள் என கருதுபவர்களை சிறையில் அடைக்கவும் தீர்மானித்துள்ளார்.

இந்த நடவடிக்கையானது வோஷிங்டனை முன்னர் இருந்ததை விட பாதுகாப்பானதாகவும் அழகாகவும் மாற்றும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நடவடிக்கை மிக விரைவில் செயற்படுத்தப்படும் எனவும் வீதியோரங்களில் வசிப்பவர்களுக்கு வேறு இடங்களை வழங்கவுள்ளதாகவும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். (நி)

# துருக்கியை உலுக்… அலறியடித்து … இடிந்து விழுந்த…

(அங்காரா)

துருக்கியின் வடமேற்கு மாகாணம… பாலிகேசிரில் நேற்று முன்தினம் இரவு … ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்… ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்த… ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும், 29 … காயமடைந்துள்ளதாகவும் வெளிநா… செய்திகள் தெரிவிக்கின்றன.



சிந்திர்கி நகரத்தை மையமாகக் கொண்ட இந்த நிலநடுக்கம், 16 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வசிக்கும் இஸ்தான்புல்லின் வடக்கே சுமார் 200… ஏற்ப…

சி… கட்ட… கியி… ணை… உயி… அ… தெரி… ஊட… டுள்… அ… நான… தியக…

## பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் திட்டத்தை வெளியிட்ட அவுஸ்திரேலியா

(கன்பெரா)

அடுத்த மாதம் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் அவுஸ்திரேலியா பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் என்று அந்நாட்டுப் பிரதமர் அந்தோனி அல்பானீஸ் நேற்று திங்களன்று தெரிவித்தார்.

பிரான்ஸ், பிரித்தானியா மற்றும் கனடாவின் இதே போன்ற அறிவிப்புகளுக்குப் பின்னர் இஸ்ரேல் மீதான சர்வதேச அழுத்தத்தை அதிகரிக்கும் அண்மைய நடவடிக்கை இதுவாகும்.

"இரு நாடுகள் தீர்வு, காசாவில் போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவித்தல் ஆகியவற்றிற்கான சர்வதேச உந்துதலுக்கு பங்களிக்கும் வகையில், எதிர்வரும் செப்டெம்பரில் நடைபெறும் ஐக்கிய நாடு… சபை… பால… என்… தெரி… அ… பின்… விப… யாள… அ… அதி… உறு…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ுக்கிய நிலநடுக்கம்
# ...ு ஓடிய மக்கள்
# ...ந்த கட்டடங்கள்

■■■■■
...னமான
...ரவு 6.1
...டுக்கம்
...த்தால்
...9 பேர்
...நாட்டு



200 கிலோமீற்றர் தொலைவில் ஏற்பட்டுள்ளது.

சிந்திர்கியில் இடிந்து விழுந்த கட்டடத்தின் இடிபாடுகளில் சிக்கியிருந்த வயோதிப பெண்ணொருவர் மீட்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக துருக்கி உள்துறை அமைச்சர் அலி யெர்லிகாயா தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்த கட்டடத்திலிருந்து மேலும் நான்கு பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பகுதியில் மொத்தம் 16 கட்டடங்கள் இடிந்து விழுந்ததாக கூறிய அமைச்சர், அவற்றில் பெரும்பாலானவை பாழடைந்தவை மற்றும் பயன்படுத்தப்படாதவை எனவும் தெரிவித்தார்.

இடிபாடுகளில் எவரேனும் சிக்கியிருந்தால் அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளில் மீட்பு குழுவினர் ஈடுப்பட்டுள்ளனர்.

இந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து 4.6 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் உட்பட பல பின்னதிர்வுகள் ஏற்பட்டுள்ளதால், சேதமடைந்த கட்டடங்களுக்குள் நுழைய வேண்டாம் என்று அந்நாட்டு பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

# வேகமாக பரவும் கொரோனா வைரஸ்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உருமாறிய கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருவதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

"XFG" எனப்படும் உருமாறிய கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருவதாகவும், இது குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மாறுபாடு பல ஐரோப்பிய நாடுகளிலும் கண்டறியப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

"XFG" மாறுபாடு முதன் முதலில் தென்கிழக்கு ஆசியாவில் ஜனவரி மாதம் கண்டறியப்பட்டது.

ஜுன் மாதமளவில் "XFG" மாறுபாட்டின் தாக்கம் அமெரிக்காவில் தாக்கத்தை செலுத்த ஆரம்பித்துள்ளது. (நி)

# சிந்துநதியில் அணை கட்டினால் அழிப்போம்

## பாக்.இராணுவ தளபதி

(இஸ்லாமாபாத்)

சிந்து நதியில் இந்தியா அணை கட்டினால் அழித்து விடுவோம் என்றும், சிந்து நதி நீர் உரிமைகளை எந்த விலை கொடுத்தும் பாதுகாப்போம் என்றும் பாகிஸ்தான் இராணுவத் தளபதி அசிம் முனீர் தெரிவித்தார்.

பஹல்காம் தாக்குதல் மற்றும் ஆப்ரேஷன் சிந்தூர் தாக்குதலுக்குப் பின்னர் சையத் அசிம் முனீர் இரண்டாவது முறையாக அமெரிக்கா சென்றுள்ளார். வோஷிங்டன் டி.சியில், டம்பாவில் பாகிஸ்தானின் தூதர் அட்னான் ஆசாத் நடத்திய கருப்பு-டை இரவு விருந்தில் பங்கேற்ற அசிம் முனீர், "சிந்து நதி இந்தியர்களின் குடும்ப சொத்து அல்ல. சிந்து ஆற்றை நிறுத்துவதற்கான இந்திய திட்டங்களை தடுப்பதற்கான ஆற்றல் எங்களிடம் உள்ளது.

காஷ்மீர் பாகிஸ்தானின் "கழுத்து நரம்பு". அது இந்தியாவின் உள் விவகாரம் அல்ல, தீர்க்கப்படாத சர்வதேச பிரச்சினை. "ஆப்ரேஷன் சிந்தூர்" என்பது பாகிஸ்தானின் இறையாண்மையின் மீதான இந்தியாவின் கடுமையான மீறல்" என்று அவர் பேசியதாக வெளியிடப்பட்ட செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்தியா - பாகிஸ்தான் இடையிலான பதற்றங்களைத் தணிப்பதில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் பங்களிப்புக்கு முனீர் நன்றி தெரிவித்தார். (நி)

நாடுகள் சபையின் 80 ஆவது பொதுச் சபை அமர்வில் அவுஸ்திரேலியா பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும்" என்று அல்பானீஸ் ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னர் அல்பானீஸ் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

மேலும், கான்பெராவில் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

அவுஸ்திரேலியா பாலஸ்தீன அதிகாரசபையிடமிருந்து பெற்ற உறுதிமொழிகளின் அடிப்படையில் அங்கீகாரம் வழங்கப்படும் என்றும், இஸ்லாமிய போராளிக் குழுவான ஹமாஸ் எந்த எதிர்கால அரசியல் பங்களிப்பிலும் ஈடுபடக் கூடாது என்றும் கூறினார்.

கடந்த வாரம் அவுஸ்திரேலியா, இஸ்ரேல் காசாவை இராணுவக் கட்டுப்பாட்டில் எடுக்கும் திட்டத்தை விமர்[illegible]

மேலும், சர்வதேச சமூகத்தின் அழைப்புகளை நெதன்யாகு புறக்கணித்ததாலும், காசாவில் சட்ட மற்றும் நெறிமுறைக் கடமைகளுக்கு இணங்கத் தவறியதாலும் பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் முடிவு "மேலும் கட்டாயப் படுத்தப்பட்டது" என்றும் தெரிவித்தார்.

இதனிடையே, நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சர் வின்ஸ்டன் பீட்டர்ஸ் திங்களன்று, "பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது குறித்து அடுத்த மாதத்தில் வெலிங்டன் தனது நிலைப்பாட்டை கவனமாக பரிசீலிக்கும்" என்று கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொடிப்பொழுது இழைக்கும் தவறு வாழ்வில் நீங்காத வடுக்களைத் தந்துவிடுகிறது

# பரந்தன் சந்தியில் டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்து

# நடந்தது என்ன?



மேகங்கள் அங்கும் இங்கும் அலைமோதிக் கொண்டிருக்க சூரியன் தன் பிஞ்சுக்கரங்களை நீட்டிக்கொண்டு மெல்ல எழுந்தான். அன்றைய நாள் விடியல் எல்லோருக்கும் நல்லதாக அமைய வேண்டும் என்பதே எல்லோரது எதிர்பார்ப்பும், அவ்வாறு தான் யதுகிரியின் எண்ணங்களும். வழமைபோல் தன் கனவுகளுடன் பல எண்ணங்கள் அவளது உள்ளத்தில் ஓடிக்கொண்டிருக்க புறப்பட்டாள் யதுகிரி. கனவாலும் நினைத்திருக்க மாட்டாள் இன்றுதான் தன் கடைசி நாள் என்று. வேலைக்காக தனது மோட்டார் சைக்கிளில் வந்தவளை காலனவன் டிப்பர் வடிவில் வந்து பறித்தெடுத்தான் அவள் உயிரிழந்த செய்தி கேட்டு பதறிய தாய் உள்ளம் கதறியபடி ஓடினாள் காலனை விரட்டி மகளின் உயிரை பறிக்க கிணற்றடிக்கு. அவரின் தாய்ப்பாசம் சொல்கிறது யதுகிரியின் வளர்ப்பைப் பற்றி

கிளிநொச்சி மாவட்டத்தின் இயற்கை அன்னையின் மொத்த அழகையும் தனக்குள் வைத்துள்ளது பரந்தன் எனும் அழகு தேவதை. அவ்வாறான எழில் கொஞ்சும் அழகிய பரந்தனின் குமரபுரத்தைச் சேர்ந்த சந்திரசேகரம் ஜயாவினுடைய மகளின் இறப்புச் செய்தி கேட்டு அவரின் வீட்டிற்கு சென்று கொண்டிருந்த வேளை, வீதியோரமாக ஒரு வயோதிபர் நடந்து செல்வதைக் கண்டு எனது மோட்டார் சைக்கிளை நிறுத்தினேன். ஏனென்றால் எனக்கு வீடு இருக்கும் இடம் சரியாக தெரியாது அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வோம் என ஐயா நேற்று பரந்தன் சந்தியில் டிப்பர் அடிச்சு செத்த பிள்ளையின்ட வீடு எவடத்த எண்டு கேட்ட போது கலங்கிய கண்களோடு என்னை நிமிர்ந்து பார்த்தார். நானும் அங்குதான் செல்கின்றேன் என்று தன்னிலை மறந்து கதைகூற ஆரம்பித்தார். அவர் நிலைகண்டு என்னை மறந்த நான் மோட்டார் சைக்கிளில் வந்ததை மறந்து அவருடன் நடந்தேன். அப்போது அவர் மெதுவாக என்னிடம் கேட்டார் தம்பி செத்த பிள்ளைய உனக்கு தெரியுமோ என்று. இல்லை ஐயா நான் அவருடைய உறவினர் உடைய பழக்கத்தில் தான் அங்கு செல்கின்றேன் என்று கூறினேன்.

என்ன வாழ்க்கை அப்பு இது சாகும் வயதில் நானிருக்கின்றேன் வாழும் வயதில் யதுகிரி என்று மௌனமாக அவரது கண்கள் கண்ணீர் சொரிந்தன. அப்பன் இந்த 96ஆம் ஆண்டு இடம்பெயர்வில் இங்க இருந்து போய் வன்னியில இருக்கேக்க தான் இவள் பிறந்தவள். நான் நினைக்கிறேன் சந்திரசேகரனின்ட நான்காவது பிள்ளை 1996ஆம் ஆண்டு இவள் பிறந்து நான்கு வயது மட்டும் நடக்கவே மாட்டாள். அதுகள் வேண்டாத தெய்வம் இல்ல. நான்கு வயதுக்கு பிறகுதான் மெது மெதுவா நடக்கத் தொடங்கினாள் பிறகு இப்படியே 2002 ஆம் ஆண்டு இங்க வந்திட்டினம்.

நல்ல கெட்டிக்காரி. விளையாட்டிலும் சரி, படிப்பிலும் சரி பிறருக்கு உதவி செய்வதிலும் ஒரு வித்தியாசமானவள். இவளின் அளவில் யாரையும் நான் பாத்ததில்லை எல்லோருக்கும் அன்பை சரிசமமாக காட்டுபவள் சாப்பாட்டைத்தான் " எள்ளானாலும் ஏழாப் பிரி" என்பாள் இவள் காட்டும் கருணை, அன்பு, பாசம் யாவுமே சமனாக தான் இருக்கும் என்று கூறிக்கொண்டிருக்கும் போதே வீட்டிற்கு வந்துவிட்டோம். வீட்டிலிருந்து 100m தூரமளவு வரை பனர்கள் இருபுறமும் எனக்கு முதியவர் சொன்னதிற்கும் இதனை பார்த்ததிற்கும் தூக்கி வாரிப் போட்டது இப்படி ஒரு பிள்ளையா என்று அத்தனையும் உண்மை என உணரும் தருணமாக வானம் சிறுக சிறுக மழைத்துளிகளை பொழிந்தது. அந்த மழைத்துளிகள் பனர்களில்பட்டு கண்ணீர் சிந்துவது போல சிந்தின. அத்தனையும் பார்த்த நான் யதுகிரியின் வாழ்க்கை இவ்வளவு சீக்கிரம் முடிந்திருக்கக் கூடாது கடவுளே என்று நினைத்துக் கொண்டே உள்ளே சென்றேன்.

உள்ளே சென்றதும் யதுகிரியின் உடலுக்கு அருகில் தாயவள் அழுதுகொண்டிருந்தாள். எனக்கொரு வருத்தம் என்றால் என்னை பெற்றவள் போல் நான் பெற்ற செல்லம் என்னை பார்த்தாளே அவள் இங்கு மூச்சு பேச்சின்றி கிடக்கின்றாள் என்னால் எதுவும் செய்யமுடியவில்லை. என் பிள்ளைக்கு சொந்த பந்தம் கூட்டி கல்யாணம் செய்ய ஆசைப்பட்டேன். கடைசியில் அவளது இறுதி ஊர்வலத்திற்கு எல்லோரையும் வரும்படியாக செய்துவிட்டதே விதி. சிறுவயதில் இருந்து பெருமையும் பேரும் வாங்கித்தந்த என் பிள்ளைக்கு கல்யாண மாலை போட முடியாமல் போய்விட்டதே என்பிள்ளைக்கு என் கையால் கருமாரிக்க மாலையிட வைத்துவிட்டாயே என புலம்பிய புலம்பல் எல்லோரதும் கண்களிலும் கண்ணீர் ஆறாக பாய்ந்தது. அந்த தாயின் அழுகுரல் எல்லோரது மனதையும் கண்ணாடி போல் சுக்குநூறாக உடைத்துவிட்டது.

அப்படியே போய் ஒரு ஓரமாக இருந்தேன் யாரைப் பார்த்தாலும் யதுகிரி அப்படி செய்தாள்,இப்படி செய்தாள் என்று. யதுகிரி இறந்து கிடக்கிறாள் என்பதை மறக்கும் அளவில் கதைத்துக் கொண்டிருந்தனர். இவ்வாறு எல்லோரும் கதைத்துக் கொண்டிருக்கும் போது யதுகிரியின் உறவினர் ஒருவர் பக்கத்தில் இருந்தவருக்கு கூறிக்கொண்டிருந்தார். யதுகிரி சிறு வயதிலிருந்து விளையாட்டிலும் சரி மற்றும் கலைகள் எல்லாவற்றிலும் சிறந்தவள். விளையாட்டு என்றால் முதலிடம் யதுகிரி. அதே போல் பாடசாலையில் ஏதும் நிகழ்வாக இருந்தாலும் விழாவாக இருந்தாலும் சரி யதுகிரியின் நிகழ்வு இருக்கும். அவள் இல்லாத நிகழ்வு இருக்காது. அவளின் திறமை எல்லாவற்றிலும் புறம்பானது அவளுக்கு அந்த திறன் பிறக்கும் போதே கடவுள் கொடுத்த வரம் என்றுதான் சொல்ல வேண்டும்.

சிறு பறவைகள்,மரம்,செடிகள் என இயற்கையின் அழகை இரசிப்பதிலும் அவளைப்போல் யாரும் இல்லை. அவளின் இழப்பை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை இத்தனைக்கும் அவள் ஒரு பட்டதாரி கிழக்கு பல்கலைக்கழகம் சென்று பட்டபடிப்பு முடித்தவள். படித்து முடிய அரச வேலை கிடைக்கும் வரை தாமதிக்காமல் தனியார் நிறுவனம் ஒன்றில் பணி புரிந்துகொண்டிருக்கிறாள். அங்கு செல்லும்போது தான் இவ்வாறு நடந்துவிட்டது என்று அவளை நினைத்து குமுறி அழுதார். அவரைச் சுற்றியுள்ள வர்கள் சமாதானம் செய்தனர்.

அவரைச் சமாதானம் செய்து கொண்டிருக்கும் போது எனக்கு பக்கத்தில் ஒருவர் வந்து அமர்ந்தார். நான் எதர்ச்சியாக அவரின் முகத்தைப் பார்த்தேன். எனது நிறுவனத்தில் தான் யதுகிரி வேலை செய்கிறாள். எனது அனுபவத்தில் இப்படி ஒரு பிள்ளையை பார்த்ததில்லை அவரின் இழப்பை ஜீரணிக்க முடியவில்லை. கொஞ்ச நாளைக்கு முன்னால் வந்து நான் வேலையை விட்போகிறேன் என்றாள். ஏன் என்று கேட்டேன் என் அம்மாவிற்கு கண் ஒப்ரேசன் செய்திருக்கு. நான் தான் அவரைப் பார்க்கவேண்டும் எனக்கு அம்மாவிற்கு பிறகு தான் எல்லாமே என்று கூறினாள். எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.ஏனென்றால் அவளின் திறமை அவளின் ஆர்வம், வேலையில் காட்டும் பற்றுணவர்வு இதுவரை யாரிலும் பார்த்தில்லை. அதனால் நீ வேலையை விட வேண்டாம் எத்தனை நாள் வேண்டுமானாலும் லீவு எடுத்துக்கொள் அம்மமாவிற்கு சுகமானதும் வேலைக்கு வா என்று கூறி அனுப்பினேன் எனக் கூறி அழுதார்.

இவ்வாறு ஒவ்வொருவராக யதுகிரியின் ஒவ்வொரு விடயங்களை புலம்பிக்கொண்டிருந்த போது கிளி/பரந்தன் இந்துக்கல்லூரி முதல்வர் கண்ணீர் அஞ்சலி உரை ஆற்றினார். அவர் உரை ஆற்றும் முன்பே அவரது கண்ணில் கண்ணீர் ஆறாக பெருக்கெடுத்திருந்தன. அவர் சொன்ன விடயங்கள் எல்லோரும் சொன்னதையும் கேட்டவையாக இருந்தாலும் திகட்டாதவையாக கேட்டுக் கொண்டிருந்தனர் அனைவரும். அப்போது அவர் ஒரு விடயம் சொன்னார். நான் ஒருநாள் யதுகிரியிடம் உனக்கு யதுகிரி என பெயர் வைத்தது யார் எனக் கேட்டேன். அதற்கு அவள் கர்வமாகவும் விளையாட்டாகவும் பதிலளித்தாள். என் அப்பாதான் வைத்தார் என்றாள் யதுகிரி. யதுகிரி என்றால் என்ன தெரியுமா உங்களுக்கு? பாரதிக்கு பாடம் சொல்லிக்கொடுத்த ஆசான் தான் சேர் யதுகிரி. அவரின் பெயரைத்தான் அப்பா எனக்கு வைத்துள்ளார் என்றாள். அவள் கூறியது முற்றிலும் உண்மை அந்த பெயர் அவளுக்கு அவ்வளவு பொருத்தம் எனக் கலங்கினார்.

இங்கு நடைபெறும் ஒவ்வொரு விடயமும் எனக்குள் பல எண்ணங்களை எழுப்பின. ஒரு சாதாரண பெண் அவள். அவள் வாழ்ந்த வாழ்க்கை எல்லோர் மனதிலும் இப்படி இடம்பிடித்திருக்கின்றதே. கிழக்கு பல்கலைக்கழக பட்டதாரி, அதோடு ஒரு புகைப்பட கலைஞர், இலக்கிய வாதியாகவும் இருக்கிறாள். அதோடு ஊர்மக்களின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவளாக இருக்கிறாள். வேலை செய்யும் இடத்தில் ஒரு சிறந்த வழிகாட்டி. ஒரு தந்தைக்கு ஒப்பாகப் பார்க்கப் படுகிறாள். ஒரு மனிதரால் இத்தனை யாகவும் எவ்வாறு இருக்க முடியும். இந்த சிறுவயதில் இயற்கை கூட விடை பெறமுடியாமல் தன் வருத்தம் தெரிவிக்கும் முகமாக மழைத்துளியாக தன் கண்ணீர் பூக்களை தெளிக்கின்றது.

இவ்வாறு வாழ வேண்டிய பிள்ளைகள் பலரின் உயிரை சர்வசாதாரணமாக எடுத்துவிடுகிறது வீதி விபத்து என்ற அரக்கன்.

சட்டங்கள் இறுக்கமடைந்தால் தவறுகள் குறைக்கப்படும் என்று கூறுவார்கள். வீதி விபத்தென்பது சாரதிகளின் கவனயீனத்தால் ஏற்படுவது.

ஒரு சாரதியின் சிறு கவனயீனம் ஒரு உயிரையே எடுக்கிறது எனின் நிச்சயம் அதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தற்போது அதிகளவான விபத்துக்கள் டிப்பர் போன்ற கனரக வாகனங்களால் நடைபெறுகின்றன.

எனவே வீதி விதிகளில் டிப்பர் போன்ற கனரக வாகனங்களின் மீதான சட்டங்கள் இறுக்க வேண்டும் இல்லையேல் இன்னும் பல யதுகிரிகளை எம் சமூகம் இழக்க வேண்டிவரும்.


கிளி குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘எமது நிலம் எமக்கு வேண்டும்’

# மன்னாரில் மாபெரும் போராட்டம்

## செல்வம் எம்.பி அழைப்பு!



(மன்னார்)

**கனிய மணல் அகழ்வுக்கு எதிராக மன்னாரில் வடக்கு-கிழக்கில் உள்ள அரசியல் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

மண்ணையும் மக்களையும் மீட்க ஆயுதப் போராட்டமாக இருந்தாலும் சரி,அகிம்சை வழி போராட்டமாகவும் இருந்தாலும் சரி இந்த மண்ணில் இடம் பெற்றது. இந்த நிலையில் மன்னார் மக்களின் வாழ்வை பாதிக்கின்ற வகையில் முன்னெடுக்கப்படுகின்ற காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக வடக்கு கிழக்கில் உள்ள அரசியல் பிரதிநிதிகளை எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை மன்னாரில் ஒன்றிணைத்து "எமது நிலம் எமக்கு வேண்டும்" எனும் தொனிப்பொருளில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற 2 ஆம் கட்ட காற்றாலை கோபுரம் அமைத்தல் மற்றும் கணிய மணல் அகழ்வுக்கு எதிராக போராட்டம் ஒன்றை மன்னாரில் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மன்னார் பஜார் பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள குறித்த போராட்டத்தில் கலந்து கொள்ள வடக்கு கிழக்கை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள்,உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், வடக்கு கிழக்கை சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளர்களை குறித்த போராட்டத்தில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கின்றோம்.

குறித்த போராட்டம் ஊடாக நாங்கள் தென்னிலங்கைக்கு ஓர் செய்தியை சொல்ல வேண்டும்.எமது மக்களையும்,மண்ணையும் யாரும் அபகரிக்க முடியாது.நாங்கள் துப்பாக்கி ஏந்திப் போராடிய போது தியாகங்களை செய்தவர்கள்.

எனவே அரசியல் கட்சி பேதங்களின்றி பாராளுமன்ற உறுப்பினர்கள்,நகரசபை,பிரதேசசபை, மாநகரசபை உறுப்பினர்கள் அனைவரும் குறித்த போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

தென்னிலங்கைக்கு நாங்கள் பாடம் புகட்டும் வகையில் எமது மண்ணையும் மக்களையும் காப்பாற்றும் வகையில் இடம் பெறும் இப் போராட்டத்தில் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் அழைப்பு விடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (8-285)

# மன்னார் காற்றாலைத் திட்டத்தை நிறுத்துங்கள் வவுனியாவில் மனிதச்சங்கிலி போராட்டம்!

(வவுனியா)

மன்னாரில் முன்னெடுக்கவுள்ள காற்றாலைத் திட்டத்தை நிறுத்தக்கோரியும், இல்மனைற் அகழ்விற்கு எதிராகவும் மன்னாரில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சத்தியாக்கிரக போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் மனிதச்சங்கிலி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



வவுனியா வைத்திய சாலை சுற்றுவட்டத்திற்கு அண்மையில் நேற்று திங்கட்கிழமை குறித்த போராட்டம் நடைபெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த போராட்டக்காரர்கள், அபிவிருத்தியின் பெயரால் மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இத்திட்டங்களை நிறுத்தவேண்டும்.இலங்கையின் மீன்பிடி தொழில் மற்றும் பறவைகளின் பாதுகாப்பு சரணாலயம், இயற்கை காற்றின் வலு முதலானவற்றிற்கு பெயர் பெற்ற இடமாக மன்னார் விளங்குகிறது.

இந்தநிலையில் ஏகபோக இராட்சத பல்தேசிய கம்பெனிகளின் இலாப வேட்டையாலும், இலங்கை அரசாங்கங்களின் கையாலாகாத நிலையாலும் அழிவை எதிர்நோக்கி உள்ளது மன்னார் தீவு.

எனவே மன்னாரில் நடைபெற இருக்கின்ற இவ் அகழ்வு மன்னார் தீவையே மனித வாழ்வுக்கு உகந்ததாக இல்லாமல் செய்து விடும் அளவிற்கு ஆபத்தானது. இந்த காற்றாலை மற்றும் கனிய அகழ்வு நாட்டின் தேவைக் கானதன்றி பல்தேசிய கம்பெனிகளின் இலாபக் குவிப்புக்கானதே என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும் என்றனர்.

வவுனியா சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்போராட்டத்தில், அரசியல் தரப்பினர், சமூக செயற்பாட்டாளர்கள்,பொது அமைப்புக்களை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (8)

# கிளி.மாவட்ட அரச அதிபர் கடமைகளைப் பொறுப்பேற்பு!



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக சுப்பிரமணியம் முரளிதரன் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் தனது கடமைகளை நேற்றைய தினம் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பதில் அரசாங்க அதிபராக கடமையாற்றிய சுப்பிரமணியம் முரளிதரன் கடந்த 5 ஆம் திகதி அன்று கிளி. மாவட்டத்தின் அரச அதிபருக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்றுக் காலை தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். (8-316)

# கருநிலம் போராட்டத்திற்கு ஆதரவாக யாழில் கவனயீர்ப்பு!

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் பல்தேசிய நிறுவனங்களின் இல்மனைட் கனிம மணல் சுரண்டலை கண்டித்து, இளைஞர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வு போராட்டம் நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் பண்ணை பகுதியில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களில் ஒன்றாக மணல் உள்ளது. இந்த மணல் இல்மனைட் கனிமத்தை கொண்டிருப்பதால் உலகளவில் பெரும் கேள்வி உள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கும் மேலாக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பல்தேசிய நிறுவனம் ஒன்று இல்மனைட் மணல் அகழ முயற்சித்து வருகிறது.

இந்த அகழ்வைத் தடுக்கவும், மக்களின் பூர்வீக நிலங்களையும் இருப்பையும் பாதுகாக்கவும் "கருநிலம் பாதுகாப்பு" என்ற கருப்பொருளுடன் மக்களை விழிப்புணர்வு செய்யும் போராட்டத்தை முன்னெடுக்க இளையோர் நடவடிக்கைகளை முன்னெடுத்த நிலையில் குறித்த விழிப்புணர்வு போராட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இதன் போது அரசியல் பிரதிநிதிகள், இளையோர் என பலரும் கலந்துகொண்டுடன் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பேரணி ஒன்றையும் முன்னெடுத்திருந்தனர். (8-33)



தரம் 11 மாணவர்களுக்கான இலவச செயலமர்வு கந்தசாமி சக்திதரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் கலந்து சிறப்பித்தார். இந் நிகழ்வுக்கு முழுமையான நிதிப்பங்களிப்பினை வே.தேவசேனாதிபதி (LL.B கொழும்பு) என்பவர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 842





மதுராந்தகத் தேவர் சிம்மாசனம் ஏறி இராஜ்யம் ஆள ஆசைப்படும்போது, நான் கத்திச் சண்டை கற்றுக் கொள்வதுதானா முடியாத காரியம்?" என்றான் சேந்தன் அமுதன்.

இதற்குள் பூங்குழலியின் அண்ணியைக் கட்டிப் போட்டிருந்த மரத்தடிக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அங்கே அந்த மாதரசியைக் காணவில்லை. அவளுடைய மண்டையில் பட்ட காயத்திலிருந்து தரையில் சிந்தியிருந்த இரத்தத் துளிகளைச் சேந்தன் அமுதன் பூங்குழலிக்குச் சுட்டிக் காட்டினான்.

"நன்றாக அடித்துவிட்டிருக்கிறார்கள் அத்தையைப் பிடித்துக் கொண்டு போனவர்களுக்கு அண்ணி உளவு சொல்லவில்லையென்பது நிச்சயமாகிறது. ஆனால் அவள் வேறு யாருக்காக என்ன உளவு பார்த்துக் கொண்டிருந்தாள் என்பதை எப்படியாவது கண்டு பிடிக்க வேண்டும்!" என்றாள் பூங்குழலி.

"மாமன் மகளே! இதைக் கேள்! இங்கே நடந்திருப்பதெல்லாம் காரணம் தெரியாத மர்மமான காரியங்களாயிருக்கின்றன. இரகசியத்துக்குள் இரகசியமாகவும், சுழலுக்குள் சுழலாகவும் இருக்கின்றன. எல்லாம் இராஜாங்கத்தோடும் இராஜ வம்சத்தாரோடும் சம்பந்தப்பட்ட சிக்கல்களாக இருக்கின்றன. இவற்றைக் குறித்து நீயும் நானும் ஏன் கவலைப்பட வேண்டும்? நம்மை நாமே ஏன் சங்கடத்துக்கு உள்ளாக்கிக் கொள்ள வேண்டும்?"

"அமுதா! எவ்வளவு பெரிய இராஜாங்க விஷயமாயிருந்தால் என்ன? எத்தகைய மர்மமாக இருந்தால்தான் என்ன? என் அத்தை சம்பந்தப்பட்ட காரியத்தில் நான் கவலை எடுத்துப் பாடுபடாமலிருக்க முடியுமா? உன் பெரியம்மாவின் கதியைப் பற்றி நீ சிந்திக்காமலிருக்க முடியுமா?"

"என் மனதில் பட்டதை நான் சொல்கிறேன், பூங்குழலி! நான் பார்த்த ஏழெட்டு மனிதர்களுக்கு நடுவில் ஒரு பெண் பிள்ளையும் சென்றாள் என்று சொன்னேன் அல்லவா? அவள் என் பெரியம்மாவாக இருக்கக்கூடும் என்றும் சொன்னேன் அல்லவா? அவள் நடந்துபோன விதத்தைப் பார்த்தால், கட்டாயப்படுத்தி அவளை அழைத்துப் போனதாகத் தோன்றவில்லை. தன் இஷ்டத்துடனே யதேச்சையாகச் சென்றவள் போலவே காணப்பட்டது"


"இருக்கலாம், அமுதா! அப்படியும் இருக்கலாம் என் அத்தையின் இயல்பே அப்படி! எங்கேதான் அழைத்துப் போகிறார்கள் என்று தெரிந்து கொள்வதற்காகவே அவளே இஷ்டப்பட்டுப் போயிருக்கலாம். அவளுக்கு விருப்பமில்லாவிட்டால், ஆயிரம் பேருக்கு நடுவிலிருந்தும் அவள் தப்பிச் சென்று விடுவாள். கோட்டை கொத்தளங்களும் பாதாளச் சிறைகளும் கூட அவளைப் பத்திரப்படுத்தி வைக்க முடியாது. ஆகையினால்தான், அத்தைக்கு நேர்ந்த ஆபத்தைப் பற்றி, நான் அவ்வளவு கவலைப்படவில்லையென்று சொன்னேன். அத்தைக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பரிகாரம் தேடுவதே என் முக்கிய நோக்கம். அந்த அநீதி இன்றைக்கு இழைக்கப்பட்டதன்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் செய்யப்பட்ட கொடும் அநீதி! அதற்குப் பரிகாரம் கிடைக்கும் வரையில் எனக்கு நிம்மதி இல்லை!" என்றாள் பூங்குழலி. "கடவுளே! எவ்வளவு அசாத்தியமான காரியத்தில் உன்மனத்தைப் பிரவேசிக்க விட்டிருக்கிறாய்?"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## காட்டில் தேர்தலோ தேர்தல்



(நேற்றைய தொடர்ச்சி)

"ஓநாயார்" அணி சார்பாக எங்கள் அணி வெற்றி பெற்றால் மனிதர்கள், நாய்களை நினைத்தபடி வேலை வாங்குதல் கூடாது.

2. ஷிப்ட் முறையில்தான் நாய்களுக்கு வேலை வழங்க வேண்டும்,

3.வாரம் ஒரு முறை மாமிச உணவு வழங்க வேண்டும்.

4. பாதையில் இருக்கும் நாய்களை துன்புறுத்தும் மனிதர்களின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

5.அனைத்து மிருகங்களுக்கும் தண்ணீர் வசதி ஏற்படுத்தி தரப்படும் என அறிவித்தன.

வரிக்குதிரையார் அணியும், யானையார் அணியும் கூட்டாக தங்கள் தேர்தல் அறிக்கையாக

1. அனைவருக்கும் புல் கட்டு இலவசம் மாமிசங்களும் இலவசம்.

2. மனிதர்களால் கைவிடப்பட்ட குதிரைகளுக்கு மறு வாழ்வு கொடுப்பது, அவர்கள் இனமான கழுதையார் இனம் மனிதர்களால் திட்டமிட்டு அழிக்கப்படுவதை தடுப்பது.

3. எருமை இனங்களையும் காப்பது,

4. உழவுக்கு மட்டுமே எருதுகளை பயன்படுத்த வேண்டும்.

5.அதிக பாரம் ஏற்றி மாடுகளை மனிதர்கள் தொல்லை செய்யக் கூடாது.

6.கன்று குட்டிகளுக்கு பால் வைத்து விட்டுத்தான் மீதமுள்ளதை மனிதன் எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படி பல வாக்குறுதிகளை அளித்தன.

பிரசாரம் அனல் பறக்க ஆரம்பித்தது. எண்ணிக்கையில் யார் அதிகம் இருக்கிறார்கள் என்று ஆளாளுக்கு ஒரு கணக்கை சொல்லி, தாங்கள்தான் வெற்றி பெறுவோம் என முழக்கமிட்டன.

நாட்டில் வசிக்கும் பூனைகள், நாய்கள், குதிரைகள், கழுதைகள் இவைகளுக்கு எங்கு ஓட்டு போட வைப்பது என்ற குழப்பம் வந்தது. ஊரை ஒட்டி ஒரு வாக்கு சாவடி வைத்து எல்லா மிருகங்களும் அங்கு வந்து ஓட்டு போட வைப்பது என்று கரடியார் தலைமையிலான தேர்தல் கமிசன் முடிவு செய்தது.

இன்றுடன் வேட்பு மனு தாக்கல் முடிவடையும் நிலையில் திடீரென நத்தையார் தேர்தல் கமிசன் அலுவலகத்தில் வந்து வேட்பு மனுவை தாக்கல் செய்தது மற்ற மிருகங்கள் ஆட்சேபிக்க, நத்தையார் நான் வேட்பு மனு தாக்கல் செய்ய ஒரு வாரம் முன்பே கிளம்பி விட்டதாகவும், சரியாக கடைசி நாளில் வந்து தாக்கல் செய்து விட்டதால் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வாதிட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் அன்புள்ளம் கொண்ட, இனிய மற்றும் ஒத்துழைப்புக் கொடுப்பவர்களின் துணை விலை மதிப்பற்றது. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி அநுரவை சந்தித்துக் கதையுங்கள்

கயிறு அறுந்தால் அதனை முடிந்துவிடலாம். ஆனால் முடிச்சு இருக்கும் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

இதுபோலவே இருக்கக்கூடிய நல்லுறவைப் பேணிப் பாதுகாப்பது மிகவும் முக்கியமானது. உறவை சிதைத்துவிட்டுப் பின்னர் சரிப்படுத்தலாம் என்று நினைப்பது புத்திசாலித்தனமன்று.

ஆம், எதையும் நிதானமாகச் சிந்தித்துச் செயலாற்றுவதிலேயே எங்களின் எதிர்கால வெற்றி தங்கியுள்ளது. இப்போது நமது நாட்டில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

இந்த நாட்டில் ஊழல் புரிந்த அரசியல்வாதிகளைக் கைது செய்து அவர்களை நீதிமன்றில் நிறுத்துகின்ற நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கம் மேற்கொண்டு வரும் இந்நடவடிக்கையால், பேரினவாதிகள் குழப்பமடைந்துள்ளனர்.

அதன் காரணமாக அநுரவின் அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டும் என்ற எண்ணம் சிங்களப் பேரினவாத அரசியல் தரப்புகளிடம் ஏற்பட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக, கடந்த காலங்களில் இந்த நாட்டின் ஆட்சி அதிகாரங்களில் இருந்து நாசகாரம் செய்தவர்கள் கலக்கமடைந்துள்ளனர். இவ்வாறு அவர்கள் கலக்கமடைவதற்குத் தனித்து ஊழல் விசாரணைகள் மட்டும் காரணமல்ல.

மாறாக, செம்மணி மனிதப் புதைகுழிகளைத் தோண்டுகின்ற செயற்பாடுகளுக்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளமையும் காரணமாகும்.

உண்மை. செம்மணி மனிதப் புதைகுழியைத் தோண்டுகின்ற விடயத்தில் நீதிமன்றத்தின் சுயாதீன முடிவுகளுக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்குவதென்பது மிகவும் முக்கியமான ஒரு விடயம்.

அதிலும் செம்மணி மனிதப் புதைகுழிகளைத் தோண்டுவதற்கான நிதியையும் அரசாங்கமே விடுவிப்புச் செய்துள்ளது. இதனை நாம் வரவேற்க வேண்டும்.

ஆக, அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் தவிர்ந்த வேறு எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்திருந்தாலும் செம்மணி மனிதப் புதைகுழியைத் தோண்டுவதென்பது சாத்தியப்பட்டிருக்காது.

தவிர, முத்தையன்கட்டில் இராணுவ முகாமில் நடந்த சம்பவம் தொடர்பிலும் உடனடியாக மூன்று இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர். இத்தகைய நடவடிக்கைகள் அநுரவின் அரசு மீது நம்பிக்கை தருவதாக உள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 15ஆம் திகதி வடக்கு கிழக்கு தழுவிய பூரண கதவடைப்புப் போராட்டத்துக்கு தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

எனினும் பூரண ஹர்த்தாலுக்கான அழைப்புக்கு முன்னதாக, ஜனாதிபதி அநுரவைச் சந்தித்து நிலைமைகளை அவரிடம் எடுத்துக் கூறுவது எங்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் சுமுகமான உறவைப் பேணுவதற்கு உதவுவதாக இருக்கும்.

மாறாக, எல்லோருடனும் பகைப்பதென்பது எங்களின் இலக்கை அடைவதற்கான வழியாக ஒருபோதும் இருக்கமாட்டாது என்பதால், தந்திரோபாயங்கள் இங்கு முக்கியமானவை.

# சுமார் 40 ஆயிரம் பட்டதாரிகளுக்கு இன்னும் தொழில்வாய்ப்பு இல்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி பதவியேற்று ஒரு வருடமாகியும் சுமார் 40 ஆயிரம் பட்டதாரிகள் இன்னும் வேலைவாய்ப்பின்றி உள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

விசேட உரையொன்றினூடாக நேற்று அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் காலத்தில் கொள்கை அறிக்கையில் வேலைவாய்ப்பு குறித்த உறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் ஆட்சிக்கு வந்த பின் அவை நிறைவேற்றப்படவில்லை.

பட்டதாரிகளைத் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தி, தமது வாக்குகளை அதிகரித்து வெற்றி பெற்றாலும் ஆளுந்தரப்பைச் சேர்ந்த சகலரும் பட்டதாரிகள் விடயத்தில் இன்று கரிசனை செலுத்தத் தவறியுள்ளனர்.

சர்வதேசநாணய நிதியத்துக்கு அஞ்சியே அரசாங்கம் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்காதிருக்கின்றதோ? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

பட்டதாரிகள் நாட்டின் வளங்கள் என்பதால் அவர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த பயிற்சி மற்றும் தொழில் வழங்கி அவர்களைப் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7)

## தங்க பிஸ்கட்டுகளுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் ரூ.11.5 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள தங்க பிஸ்கட்களுடன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த தங்க பிஸ்கட்டுகளின் எடை ஒரு கிலோகிராம் 2.66 கிராம் என்று கூறப்படுகிறது.

துபாயிலிருந்து வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்யும் போர்வையில் அவை நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி கைது செய்யப்பட்ட நபர் சிலாபத்தில் வசிக்கும் 58 வயதுடையவர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

வாகன உதிரிப்பாகங்களுக்கு விதிக்கப்பட்ட வரியை சுங்க அதிகாரிகளுக்குச் செலுத்தி விட்டு திரும்பி வரும் போது, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் சந்தேகத்தின் பேரில் சோதனை செய்ததில் இந்தக் கைது மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-7)

## பொலிஸ்மா அதிபரின் நியமனம் குறித்துத் தீர்மானிக்க

### அரசியலமைப்புப் பேரவை இன்று கூடுகின்றது

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபர் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் அரசியலமைப்புப் பேரவை இன்று செவ்வாய்க்கிழமை (12) பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில் கூடவுள்ளது.

நாட்டின் 37 ஆவது பொலிஸ்மா அதிபராக பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவை நியமிப்பதற்கு அவரது பெயரை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த வாரம் கூடிய அரசியலமைப்பு பேரவைக்கு பரிந்துரைத்திருந்தார்.

தேசபந்து தென்னக்கோனைப் பதவி நீக்கம் செய்வதற்காக 2002 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றும் (நடவடிக்கை முறை) சட்டத்தின் பிரகாரம் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பிரதம நீதியரசர் பி.பி.சூரசேன தலைமையிலான குழுவினால் நிரூபிக்கப்பட்டதன் பின்னர் இந்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் 177 வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து நீக்கும் பிரேரணை நிறைவேற்றப்பட்ட பத்திரம் சபாநாயகரால் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து புதிய பொலிஸ் மா அதிபர் பதவிக்கு பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பெயரை ஜனாதிபதி அரசியலமைப்பு பேரவைக்கு பரிந்துரைத்துள்ளார். இந்தப் பரிந்துரை தொடர்பில் ஆராய்வதற்கு அரசியலமைப்பு பேரவை இன்று கூடுகிறது. (ம-7)

## போதைமாத்திரைகளுடன் யாழில் இளைஞன் கைது

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைப் பகுதியில் 5 போதை மாத்திரைகளுடன் இளைஞனொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் குறித்த கைது நடவடிக்கையானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ம-7,104)

## சபாநாயகருக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு புதிய மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்டத் தலைவரும் மாநகர சபை உறுப்பினருமான தினேஷ் அபேகோனினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர், சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம் பாராளுமன்ற ஆய்வு மற்றும் ஆராய்ச்சி மையமாக மாற்றப்பட்டுள்ளதாகவும் நிறுவன சட்டக்கோவையின்படி சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தை வேறு எந்த நோக்கத்துக்காகவும் பயன்படுத்த முடியாது எனவும் தெரிவித்தார்.

சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம் வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டால் அமைச்சரவை ஒப்புதல் தேவை என்றும் தற்போது அமைச்சரவை ஒப்புதல் பெறாமல் அதற்காகப் பாராளுமன்ற ஆலோசனைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றும் முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (ம-7)

## புகையிரதம் மோதியதில் இளைஞன் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் புகையிரதம் மோதி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மட்டக்களப்பு ஊறணியைச் சேர்ந்த 23 வயதுடைய நாகேந்திரன் கரிகரராஜ் என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் சம்பவ தினமான நேற்று முன்தினம் இரவு தண்டவாளத்தில் நின்று கொண்டு மனைவியுடன் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்துள்ளார்.

இந்த நிலையில் மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிப் பிரயாணித்த தொடருந்து குறித்த நபர் மீது மோதியதில் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 35

சொக்கன்

ஹிரோஷிமா நாகசாகியில் அந்தக் குண்டுகள் ஏற்படுத்திய பேரழிவைப் பார்த்து ஒட்டுமொத்த உலகமும் கலங்கிப்போயிருந்தது.

ஜஸ்ட் இண்டு குண்டுகளால் இப்படிச் சர்வநாசம் விளைவிக்கமுடியும் என்றால் நாளைக்கு எல்லா நாடுகளும் ஒருவர்மேல் மற்றவர் அணுகுண்டு வீச ஆரம்பித்தால் என்ன ஆகும்? சில நாள்களுக்குள் இந்தப் பூமியே சுடுகாடாக மாறிவிடாதா?


ஹிரோஷிமா நாகசாகி சம்பவங்களுக்குப் பிறகு சர்வதேச அளவில் அணு ஆராய்ச்சிக்கு ஏகப்பட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அமெரிக்கா தொடங்கி அந்தாட்டிகா வரை எங்கேயாவது யாராவது இரகசியமாக அணுகுண்டு தயாரிக்கிறார்களா என்று துப்பறிவதற்காகவே பல ஜேம்ஸ் பாண்ட் அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

அணு ஆராய்ச்சிக்குப் பயன்படுகிற வேதிப் பொருட்களைத் தயாரிப்பது. விற்பனை செய்வது கடுமையாகக் கண்காணிக்கப்பட்டது. இவற்றையும் மீறி ஒரு நாடு அணுகுண்டு தயாரித்தால் அதன்மீது பொருளாதாரத் தடைகளை விதித்து நாஸ்தி பண்ணிவிடுவோம் என்று மிரட்டினார்கள்.

ஆனால் இஸ்ரேல் அப்போது இருந்த நிலைமையில் இந்த மிரட்டலெல்லாம் அவர்களிடம்எடுபடவில்லை. அக்கம்பக்கத்துப் பயில்வான்களைச் சமாளிக்க வேண்டுமென்றால் நமக்கு நிச்சயமாக அணுஆயுதங்கள் வேண்டும் என்று தீர்மானித்துவிட்டார்கள்.

இதற்காக டிமோனா என்ற இடத்தில் ஓர் அணு ஆராய்ச்சி நிலையம் கட்டப்பட்டது. அக்கம்பக்கத்திலிருந்து யாரும் அதை நெருங்கிவிடாதபடி பக்காவாகப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து முடித்தார்கள்.

ஆனால் எப்படியோ இந்த விடயம் வெளியே கசிந்துவிட்டது. உஷாரான அமெரிக்கா தன்னுடைய உளவு விமானம் ஒன்றை இஸ்ரேலுக்கு அனுப்பியது .டிமோனோமீது பறந்து சென்ற இந்த விமானம் விசேட கமராவின்மூலம் ஏகப்பட்ட புகைப்படங்களை எடுத்தது.



இந்த ஃபோட்டோக்களைப் பார்த்தபோது இஸ்ரேல் ஓர் அணு ஆராய்ச்சி நிலையம் அமைத்திருப்பது உறுதியாகி விட்டது. உடனே அமெரிக்காவுக்கு டென்ஷன் எகிறியது. அணு ஆயுதம் தயாரிக்கிற வேலையெல்லாம் வேணாம். ஒழுங்கா டிமோனோவை இழுத்து மூடுங்க என்று இஸ்ரேலை மிரட்ட ஆரம்பித்தார்கள்.

அப்போதும் இஸ்ரேல் அசரவில்லை. நாங்கள் அணு ஆராய்ச்சி செய்வது உண்மை தான் ஆனால் அதை வைத்து அணுகுண்டு தயாரிக்க மாட்டோம் முழுக்க தொழில் வளர்ச்சி, விவசாயம், மருத்துவத் துறை முன்னேற்றங்களுக்குமட்டுமே இதைப் பயன்படுத்துவோம் என்று அறிவித்தார்கள்.

அவர்கள் சொன்னதை யாரும் நம்பவில்லை. இஸ்ரேல் அணுகுண்டு தயாரித்துக் கொண்டிருக்கிறது என்கிற தகவல் உலகம் முழுக்கப் பரபரப்பாகப் பேசப்பட்டது.

இந்த விடயத்தில் அமெரிக்காவுக்கு ஒரே ஒரு நிம்மதி. இஸ்ரேல் என்னதான் பெரிய சைஸ் அணு ஆராய்ச்சி நிலையம் கட்டிவிட்டாலும் அங்கே அவர்கள் அணுகுண்டு தயாரிக்க விரும்பினால் அதற்கு ஏகப்பட்ட மூலப்பொருள்கள் தேவை. அதையெல்லாம் வெளி மார்க்கெட்டில் யார் வேண்டுமானாலும் காசு கொடுத்து வாங்கிவிடமுடியாது. நிறையக் கட்டுப்பாடுகள் தடைகள் உண்டு அத்தனையையும் மிஞ்சி அணுகுண்டு செய்வதற்கான பொருட்களை இஸ்ரே லால் திரட்டமுடியாது என்று கணக்குப் போட்டது அமெரிக்கா.

இஸ்ரேலுக்கும் இந்த விடயம் நன்றாகத் தெரிந்திருந்தது. ஆனாலும் எப்படியாவது அமெரிக்கா மற்ற நாடுகளின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு அணுகுண்டு ஆராய்ச்சிக்குத் தேவையான இருநூறு டன் மஞ்சள் கேக்குகளை வாங்கி விடவேண்டும் என்று தீர்மானித்தார்கள். இந்தப் பொறுப்பு மொசாட் தலைவர் ஜ்வி ஜமீரிடம் ஒப்படைக்கப்பட்டது.

முதலில் உலகம் முழுக்க மஞ்சள் கேக் எங்கெல்லாம் கிடைக்கிறது என்று விசாரிக்க ஆரம்பித்தது மொசாட். குறிப்பாக 200 டன் மஞ்சள் கேக் சப்ளை செய்கிற அளவுக்குப் பெரிய நிறுவனங்களை மட்டும் வட்டம் போட்டு ஆராய்ந்தார்கள். கடைசியாக பெல்ஜியத்தில் ஒரு கம்பெனி மாட்டியது.

ஒரே பிரச்சினை. இஸ்ரேல் அவர்களிடம் நேரடியாக மஞ்சள் கேக் வாங்கமுடியாது. எத்தனை கோடி ரூபாய் கொட்டிக் கொடுத்தாலும் அணுகுண்டு ஆராய்ச்சிக்கு நாங்கள் ஒத்துழைக்கமாட்டோம் என்று மறுத்து விடுவார்கள்.

ஆகவே இஸ்ரேலின் பெயரைச் சொல்லாமல் பெல்ஜித்திலிருந்து மஞ்சள் கேக்கை லவுட்ட வேண்டும். அதற்கு என்ன வழி என்று ரூம் போட்டு யோசிக்க ஆரம்பித்தது மொசாட்

அப்போது தான் அவர்களுக்கு அந்த யோசனை தோன்றியது. அணுகுண்டு ஆராய்ச்சி என்று சொன்னால் தானே எல்லோரும் அலறுகிறார்கள்? அதற்குப் பதிலாக வேறு ஓர் உபத்திரமில்லாத பொய்க் காரணத்தைச் சொல்லி மஞ்சள் கேக்கை வாங்கிவிட்டால் என்ன?

செய்யலாம். ஆனால் இஸ்ரேல் மஞ்சள் கேக் வாங்குகிறது என்று தெரிந்தாலே அமெரிக்காவுக்கு மூக்கு வியர்த்து விடுமே அவர்களை எப்படிச் சமாளிப்பது?

அதற்கும் மொசாட் ஒரு வழி கண்டு பிடித்தது. ஒரு படத்தில் விவேக் சொல்வது போல் ரைட்ல இண்டிகேட்டர் போட்டு லெஃப்டல கை காட்டிட்டு ஸ்ட்ரெய்ட்டாப் போய்கிட்டே இருக்கவேண்டியது தான்!

## நடுக்கடல் கொள்ளை

*1968 மார்ச் பெல்ஜியத்தைச் சேர்ந்த சொஸைட்டி ஜெனராலி டெஸ் மினரெய்ஸ் என்ற நிறுவனத்துக்கு ஒரு கடிதம் வந்தது. ஜேர்மனியில் உள்ள அஸ்மாரா கம்பெனிக்கு 200 டன் மஞ்சள் கேக் தேவை உங்களால சப்ளை பண்ண முடியுமா?*

நிச்சயமாகச் செய்யலாம் என்றது SGM ஆனா இவ்வளவு மஞ்சள் கேக் எங்களுக்கு எதற்கு? இதை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்.

நாங்கள் பெட்ரோ கெமிக்கல் துறையில இறங்கப் போறோம். அந்த இராசாயணப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு யுரேனியம் வேணும். அதற்காகத் தான் மஞ்சள் கேக் வாங்குகிறோம். SGMக்கு நம்பிக்கை வரவில்லை

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோ.சைக்கிள்...

வரே உயிரிழந்தவராவார்.

மேற்படி நபர் துவிச்சக்கர வண்டியில் அரிசி ஆலை ஒன்றுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பி கொண்டிருந்தபோது பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மயக்கம் அடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு இருந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை (11) அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (ம-7,60)


மஹஜன சம்பத
திகதி 2025.08.11
சீட்டிழுப்பு இலக்கம் 5918
H 6 6 8 0 6 8
அத சம்பத
H 8 0 6 8
சீட்டிழுப்பு இலக்கம் 0493
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.08.11
0834
கன்னி 23 31 45 53

தன நிதானய
திகதி - 2025.08.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1948
Y 12 35 55 63 Y
Double Chance 21597

மெகா பவர்
திகதி 11/08/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2266
S 18 06 27 40 53

ஜய
திகதி 2025.08.11
சீட்டிழுப்பு இலக்கம் 0186
A 2 1 3 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4160
சீட்டிழுப்பு திகதி 11.08.2025
J 34 43 53 77
J

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.08.11
சீட்டிழுப்பு இலக்கம் 1227
மீனம் 13 30 55 57 மீனம்
62417


## மண்கும்பானில்...

அடையாளம் காணப்படவில்லை.

மீட்கப்பட்ட சடலமானது உடற் கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,33,104)

## மழை காரணமாக...

கிராமசேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 7 பேரும் ஜே/364 கிராமசேவகர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/393 கிராமசேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-7,33,104)

## தனியார் கல்வி...

மாணவியே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றில் உயர்தர வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு காலையில் இருந்து மதியம் 12 மணிவரை வகுப்பு நடைபெற்றுள்ளது.

குறித்த கல்வி நிலையத்தில் உயர்தர வர்த்தகப் பிரிவு 2025 இல் கல்வி கற்ற குறித்த மாணவி நீண்ட நேரமாகியும் வீடு வந்து சேராமையால் பெற்றோர் மற்றும் உறவினர்கள் குறித்த மாணவியைத் தேடியுள்ளனர்.

இதன்போது குறித்த மாணவியின் புத்தகப்பை, துவிச்சக்கரவண்டி என்பன மாணவி கல்வி பயின்ற தனியார் கல்வி நிலையத்தில் காணப்பட்டதுடன், அக் கல்வி நிலைய வளாகத்தில் இருந்த கிணற்றின் அருகே மாணவியின் செருப்பும் காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து பெற்றோர் மற்றும் கல்வி நிலைய நிர்வாகத்தினர் வவுனியாப் பொலிஸாருக்குத்தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார், மாநகர சபையினர், கிராம அலுவலர், கிராம மக்கள், மாணவர்கள் எனப் பலரும் இணைந்து 40 அடி ஆழமான கிணற்றில் தேடுதல் மேற்கொண்டு குறித்த மாணவியைச் சடலமாக மாலை மீட்டெடுத்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட மாணவியின் உடலம் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வவுனியாப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250)

## எரிகாயங்களுக்...

என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி பெண்மணி கடந்த வியாழக்கிழமை (07) தேநீர் தயாரிப்பதற்காக மண்ணெண்ணெய் ஊற்றி தீமூட்டியபோது தீ பற்றி எரிகாயங்களுக்குள்ளான நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தபோது நேற்றுத் திங்கட்கிழமை (11) அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## சங்குப்பிட்டியில்...

கஞ்சா சாவகச்சேரிப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

126 பொட்டலங்களாகப் பொதி செய்யப்பட்ட சுமார் 250 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளே இதன் போது கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7,30)

## முத்தையன்...

டுள்ளது.

குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

07.08.2025ஆம் திகதியன்று முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குட்பட்ட, ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தின் சிவநகர்ப் பிரதேசத்தில் அமைந்துள்ள 12வது சிங்கப் படையணி முகாமை அப்புறப்படுத்துவதற்கு சில நாட்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் போது 07.08.2025ஆம் திகதியன்று இரவு வேளையில் அகற்றப்பட்ட இரும்பு மற்றும் வெளிப்புறப் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக அதன் முகாம் வளாகத்தினுள் அனுமதியின்றி நுழைந்த 5 பேரை விரட்டியடிப்பதற்காக முகாமிலுள்ள உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

அதில் தப்பிச் செல்ல முயன்ற ஒருவர் முத்தையன்கட்டுக்குளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக வடக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய பொலிஸ் விசேட குழுவினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி நபர்கள் முகாம் வளாகத்தினுள் நுழைந்தபோது, முகாமிலுள்ள உத்தியோகத்தர்கள் அவர்களைக் கண்டு விரட்டியடிக்க முற்பட்டபோது, இதன் விளைவாக உள்ளே நுழைந்தவர்கள் தாக்கப்பட்டது தெரியவந்ததன் காரணமாக சிப்பாய் ஒருவரையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முகாமுக்குள் நுழைந்து திருட்டுச் சம்பவத்தை மேற்கொள்வதற்காக இக் குழுவிற்கு உதவிய இரண்டு மேலும் சிப்பாய்களும் ஒட்டு சுட்டான் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளனர்.

மேலும் அவர்களை 09.08.2025 திகதியன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதன் பின்னர், மூன்று சந்தேக நபர்களும் 19.08.2025ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் எந்தவித செல்வாக்கும் இல்லாமல், வெளிப்படையாகவும் பாரபட்சமின்றியும் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் ஒட்டுசுட்டான் பொலிஸார் மற்றும் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினரும் இணைந்து அப்பகுதியில் பாதுகாப்பை உறுதி செய்து தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,299)


உத்தியோகபூர்வ முடிவுகள்
11.08.2025 வெற்றி வாரம் 0626
Z 2 0 7 4 4 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,757,098.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2892
சீட்டிழுப்பு திகதி 2025.08.11 தினம் திங்கட்கிழமை
06 34 38 39 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,115,773.60

சனிதா
திகதி 11.08.2025 வெற்றி வாரம் 5053
02 16 44 51 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,777,952.40

ஜயோதா Jayoda
திகதி 2025.08.11 வெற்றி வாரம் 2151
02 22 30 40 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,963,904.00

சீட்டிழுப்பு வாரம் 4604
சீட்டிழுப்பு திகதி 11.08.2025 தினம் திங்கட்கிழமை
09 11 29 58 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 35 04 07 59 74
2068
11.08.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.587,245,374.60

திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2718
சீட்டிழுப்பு திகதி: 2025.08.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,912,312.80
ADA KOTIPATHI
03 30 48 66 Y


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3631)

076 825 7716 (ஆகாஸ்)

## வேலையாட்கள் தேவை

புதுக்குடியிருப்பு மற்றும் வவுனியாவில் இயங்கிவரும் புடைவையகம் ஒன்றிற்கு salesல் அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. (1432)

076 889 1308, 077 839 3974

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள பிரமாண்டமான புடைவை விற்பனை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் வேலையாட்கள் உடன் தேவை. மேலும் பில் கிளார்க் (சிட்டை எழுதுநர்) தேவை. (5020)

076 028 9835, 074 138 8156

## வேலைவாய்ப்பு

| | |
|---|---|
| Graphic Designer | 0776216741 |
| தச்சு வேலை செய்பவர்கள் | 0773580547 |
| 3D Visualizer | 0773580547 |
| Juice Maker | 0760709751 |
| Branch Manager | 0779812015 |
| Delivery Rider | 0773501095 |
| தையலாளர்கள் | 0776088262 |
| Accountant | 0776178274 |
| Business Development Executive | 0777790111 |
| கால்நடை வைத்திய உதவியாளர் | 0743344450 |
| Food city work | 0742155253 |
| Clerk | 0755489898 |
| Driver | 0776529583 |
| விற்பனையாளர்கள் | 0752589665 |
| Sales Manager (Basic 90,000) | 0779969661 |

(5019)

வேலைவாய்ப்பு வட்சப் குழுவில் இணைய மற்றும் மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு : dewmasweb.com

வேலையாட்கள் தேவையா : 074 138 3368

DEWMAS, 51, Amman Road, Nallur

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378, 076 097 3127

## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3632)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241, 076 822 6237

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Resturant ற்கு உணவு பரிமாறுபவர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தேவை. (5018)

076 830 3931

## காணி விற்பனைக்கு

அரியாலை கனகரத்தினம் வீதி, திருமகள் வீதியில் திருமகள் சனசமூக நிலையத்திற்குப் பின்புறமாக உள்ள ஏழு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (5017)

தொடர்பு : 071 671 5822

## வேலையாட்கள் தேவை

நெல்லியடியில் அமைந்துள்ள பாதணியகத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்) (C-3627)

077 651 3068, 076 717 2028

## விசேட சலுகைகள்

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை


UK - 1320/= | Australia - 2220/=
France - 2080/= | Canada - 2570/=
Germany - 1920/= | மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம் நெற்

321, K.K.S Road, Jaffna. 0777 554 528

கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மல்லாவி (5021)


## 3ஆம் ஆண்டு நினைவலைகள்



### திரு.குணமாலை சுரேஷ்

தோற்றம் 29.07.1978 | மறைவு 15.08.2022

திதி : ஆடி மாத அபரபக்க சதுர்த்தி

ஆண்டு மூன்று கடந்தாலும்
அப்பா உங்கள் நினைவு எம் மனதில்
ஆழமாய் உள்ளது.
நீங்கள் எங்கள் நெஞ்சங்களில்
எப்போதும் வாழ்ந்து
கொண்டேயிருப்பீர்கள்
நாங்கள் எங்கு சென்றாலும்
நீங்கள் நிழலாய் பயணிக்கும்
அந்த உணர்வுதான் எங்களை
இதுவரை காலமாய் இவ்வுலகில்
வாழ வைத்துள்ளது
இந்த மூன்று வருடமும்
ஈரேழு ஜென்மம் போன்று
இந்தப் பிரிவு எங்கள்
வாழ்க்கையில் நீங்கா வடு
போல் எம் வாழ்க்கையில் நிதம் நிதம்
எண்ணி கண்ணீர் வடிக்கிறோம்.
நிலவுகூட இவ்வுலகை
ஒருநாள் நிராகரித்து
விடுகிறது – ஆனால்
ஒரு நிமிடம் கூட எங்கள்
அப்பாவை நினைக்காத நாள் இல்லை.

இல.7, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (5010)

என்றும் நீங்கா நினைவுடன்:-
மனைவி, பிள்ளைகள் மற்றும் மருமகன்

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 06 - 1951



மறைவு 11 - 08 - 2025

### அமிர்தகுமாரி சந்திரகாந்தன்

**(ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர், மக்கள்வங்கி)**

கல்லூரி வீதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமிர்தகுமாரி சந்திரகாந்தன் (ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர், மக்கள் வங்கி) அவர்கள் நேற்று (11.08.2025) திங்கட்கிழமை பருத்தித்துறையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லைநாயகம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற காசுபதி - சந்தனப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சந்திரகாந்தன் (ஓய்வுபெற்ற முகாமையாளர், மக்கள் வங்கி) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மேதினிகுமாரி, சுப்ரமணியம் அவர்களின் அன்புச் சகோதரியும், அங்கவை (ஆசிரியர் - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி) அவர்களின் அன்புத் தாயாரும் புவிராஜ் (NDB வங்கி, வவுனியா) அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (12.08.2025) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பருத்தித்துறை, சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
சந்திரகாந்தன் (கணவர்) - 077 076 0717
புவராஜ் (மருமகன்) - 076 767 7431
(C-3629)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org